Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து


(C/940)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 08 ஞாயிற்றுக்கிழமை (25.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 361



பிளவு படுத்தும் முயற்சிக்கு இடமில்லை

10



வளம் இருந்தும் பயன் பெறவில்லை

04



மறைந்து 26 வருடங்கள்

09



மருந்துக்காக சுறா...

11

# இலங்கை மனித உரிமை மீறல் பொதுச்சபை விவாதிக்காது

## ஐ.நா.வுக்கான இந்திய நிரந்தரப் பிரதிநிதி தெரிவிப்பு



(நியுயோர்க்)

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின் போது நடந்ததாகக் கூறப்படும், மனித உரிமை மீறல் மற்றும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக, ஐ.நா.வின் பொதுச்சபை விவாதிக்கமாட்டாதென ஐ.நா.விற்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் கூட்டத்தில் இந்திய நிலைப்பாடு பற்றியும் பொதுச்சபை விவாதிக்க உள்ள பிரச்சினைகள் பற்றியும் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐ.நா. சபையின் கூட்டத்தில் இந்திய நிலைப்பாடு பற்றியும், பொதுக்குழு விவாதிக்க உள்ள பிரச்சினைகள் பற்றியும் பத்திரிகையாளர்களுக்கு விளக்கினார் ஐ.நா. சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு (15ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களின் தாக்குதலினால் தலையில் படுகாயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மடத்தடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொழும்பைச் சேர்ந்த சதீஸ் (வயது-26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த இளைஞர் பருத்தித்துறைப் பகுதியில் நிறுவனமொன்றில் வேலை பார்த்து வந்தவர் எனவும், சம்பவதினத்தன்று மதுபான நிலையத்துக்குச் சென்ற வேளையில் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில், வீதியில் கிடந்ததாகவும், அவருடைய நண்பர் அவரை அடையாளம் கண்டு பருத்தித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## கோடரி வெட்டில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி நாககன்னி கோவில் அருகில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் அதிகாலைவேளை முகத்தை கறுப்புத் துணியால் கட்டிக் கொண்டு புகுந்த திருடர்கள் நால்வர் தாயையும், மகனையும் கோடரியாலும், பொல்லுகளாலும் தாக்கிவிட்டு 10 பவுண் நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் இராசலிங்கம் வள்ளியம்மா (வயது - 60) மற்றும் அவரது மகன் இராசலிங்கம் ராஜாராம் (வயது-28) (15ஆம் பக்கம் பார்க்க)

## சவீந்திர சில்வாவிடம் நட்டஈடுகோரி நியுயோர்க் நீதிமன்றத்தில் வழக்கு

(நியுயோர்க்)

ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவிடம் நட்டஈடு கோரி அமெரிக்காவின் நியுயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பல்கலைக்கழக வொஷிங்டன் சட்டக் கல்லூரியினால் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

மருத்துவமனைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட இடங்கள் மீது தாக்குதல் நடத்தியது, சரணடைந்த போராளிகளை சித்திரவதை செய்தது, நீதிக்குப் புறம்பான படுகொலைகளில் ஈடுபட்டது போன்ற குற்றச்சாட்டுகள் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் ஏ.எவ்.பி. தகவல் வெளியிட்டுள்ளது.

படைகளிடம் சரணடைந்த பின்னர் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட




கேணல் ரமேசின் துணைவியார் வத்சலாதேவியும், புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீதான (15ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.பொதுச்செயலரை சந்தித்தார் ஜனாதிபதி

(நியுயோர்க்)

நியுயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் 66 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்துள்ளார். பொதுச் சபைக் கூட்டத்தொடரை முன்னிட்டு இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்பை அடுத்து மேலும் சில நாடுகளின் தலைவர்களையும் ஜனாதிபதி சந்திக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## டிசம்பருக்கு முன்னர் அரசியல் தீர்வு காலக்கெடு விதிக்கிறது கூட்டமைப்பு



(கொழும்பு)

அரசியல் தீர்வு தொடர்பாக அரசாங்கத்துடன் நடத்தப்படும் பேச்சு எதிர்வரும் டிசம்பர் மாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என அரசிற்கு வலியுறுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

எனினும், டிசம்பர் மாதத்துக் குள் பேச்சை முடிவுக்கு கொண்டு வருவது கடினமானது என அரசாங்கம் கூறியுள்ளது.

ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டிசம்பர் மாதத்துக்குள் பேச்சை முடிவுக்குக் கொண்டு வரும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் நம்பிக்கை வெளியிட்டார்.

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே இடம்பெறுகின்ற பேச்சு தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சை அரசாங்கம் தங்களின் அரசியல் தேவைக்கு ஏற்றவாறு பிரசாரம் செய்வதாக குற்றம் சாட்டப்படுவது உண்மைதான்.

ஆனாலும், அரசியல் தீர்வு குறித்த விடயத்தில் உண்மையான நிலைப்பாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பதவிக் காலத்தில் 1996 இல் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு மங்கள முனசிங்க குழுவினால் முன் மொழியப்பட்ட யோசனைகள், அமைச்சர் திஸ்ஸ விதாரன தலைமையிலான சர்வகட்சி ஆலோசணைக் குழு தயாரித்த நகல்யோசனை போன்றவற்றை அரசாங்கமும் தமிழ்த் தேசியக் (15ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை உறுப்பு நாடுகளுடன் அமைச்சர் சமரசிங்க தொடர் சந்திப்பு

(ஜெனிவா)

ஜெனிவாவில் தங்கியுள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் தூதுவருமான மகிந்த சமரசிங்க தொடர்ந்து மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் தூதுவர்களையும் நிரந்தர பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றார். எதிர்வரும் 30 ஆம் திகதிவரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் அமைச்சர் சமரசிங்க அதுவரை ஜெனிவாவில் தங்கியிருந்து முக்கியஸ்தர்களுடனான சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## போருக்குப் பிந்திய அபிவிருத்தி இந்திய பிரதமருக்கு விளக்கம்

(நியுயோர்க்)

இலங்கையில் போருக்குப் பிந்திய அபிவிருத்தி, இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு விளக்கமளித்துள்ளார்.

ஐ.நா.வின் 66 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நியுயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி நேற்று முன்தினம் மாலை நியுயோர்க் பலஸ் விடுதியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே மேற்கண்டவாறு விளக்கமளித்துள்ளார். இனப்பிரச்சினைக்குத் (15ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண வாழ்வியல் கண்காட்சி வைபவரீதியாக ஆரம்பமானது




யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் நடத்தும் "யாழ்ப்பாண வாழ்வியல்" எனும் நான்கு நாள் கண்காட்சியை தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சேனாரதன திசநாயக்க நேற்றுக்காலை வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார்.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக வைத்தீஸ்வரன் ஆலய பூசை வழிபாடுகளின பின்னர் பாரம்பரிய பொய்க்கால் குதிரையாட்டம் மற்றும் நாதஸ்வர இசை முழங்க பிரதம விருந்தினர்கள், கல்விமான்கள், துறைத்தலைவர்கள் முதலானவரகள் நிகழவிடத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

கண்காட்சியின் முன்னதாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த அரங்க நிகழ்வுகள் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியது.

தொல்லியல்துறைத் தலைவர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில், தலைமையுரையைத் தொடர்ந்து பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, தொல்பொருளியற் திணைக்களப் நாயகம் சோனாரத்ன திசாநாயக்க, சி.பத்மநாதன் உள்ளிட்டவர்கள் இக் கண்காட்சியின் தேவை குறித்து உரையாற்றியதுடன் சி.பத்மநாதன் எழுதிய "யாழ்ப்பாண ராஜசியம்" எனும் நூலும் யாழ் பல்கலைகழகத் துணைவேந்தரினால் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வரலாற்றுத்துறைப் பீடம் அமைந்திருக்கும் பகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "யாழ்ப்பாண வாழ்வியல்" கண்காட்சியினை தொல்பொருளியல் திணைக்களப் பணிப்பாளர் சேனாரத்தன திசாநாயக்க நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். இதனைத்தொடர்ந்து பிரதம விருந்தினர்கள் உள்ளிட்ட பெருமளவானவர்கள் கண்காட்சியினைப் பார்வையிட்டனர். இக் கண்காட்சி தொடர்ந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரையும் நடைபெறவுள்ளது.

மேலும் இக்கண்காட்சியில் பழமை வாய்ந்த நாணயங்கள், பாத்திரங்கள், விளக்குகள், சிலைகள், வண்டில்கள், வாகனங்கள், தேர், பன்னப்பொருட்கள், தொல்பொருள் புகைப்படங்கள் போன்றவை பகுதி பகுதியாகக் காட்சிப படுத்தப்பட்டிருக்கிறது. (பா)

# 133 குடும்பங்களுக்கு கடற்தொழில் உபகரணங்கள்


(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களில் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 133 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மணற்காடு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, வத்திராயன், ஆளியவளை கடற்தொழிலாளர் கூட்டறவுச் சங்கங்களில் இருந்து பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொரு பயனாளிக்கும் தொண்ணூறாயிரம் ரூபா பெறுமதியான கட்டுமரம், வலைகள் என்பன வழங்கப்படவிருக்கின்றன. (70)

# கைதிகளுக்கான நிகழ்வு யாழ். சிறைச்சாலையிலும்


(யாழ்ப்பாணம்)



அண்மையில் கொண்டாடப்பட்ட சர்வதேச கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ். மத்திய சிறைச்சாலையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கைதிகளுக்கான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

சிறைச்சாலை அத்தியட்சகர் எக்கநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறைக் கைதி ஒருவருக்குப் பதிவுத் திருமணம் செய்துவைக்கப்படவுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எஸ்)

# பன்றியின் தாக்குதலில் குடும்பஸ்தர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

பளைப் பகுதியில் பன்றி பாயந்து தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் (வயது - 36) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார். பளைப் பகுதிக்கு வியாபாரம் செய்வதற்காகச் சென்றபோது வீதியைக் குறுக்கறுத்த பன்றி இவர் மீது பாய்ந்ததனாலேயே இவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிசசைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-எஸ்)

# வீதிக்கு அருகான விளம்பரங்கள் விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசப் பகுதியில் வீதிக்கு அண்மையாக வைக்கப்படும் விளம்பரங்களால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின் றனர். மானிப்பாய், ஆனைக் கோட்டை, பண்டத்தரிப்புப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் தமது பொருட்களையும், விளம்பரப் பலகைகளைளுயும் வீதிக்கு அண்மையாகக் காட்சிக்கு வைத்துள்ளன. இதனால் வீதி ஓரமாக நடந்துசெல்பவர்கள், துவிச்சக்கர வண்டிகளில் செல்பவர்கள் தொடர்ந்து செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.


இதனால் அவர்கள் வீதியின் நடுப்பகுதிவரை சென்று பயணம் செய்கின்றனர்.எனவே வீதியால் செல்லும் வேறு வாகனங்களில் மோதப்பட வேண்டிய நிலை காணப்படுகிறது. இவற்றினை அகற்றும் விடயத்தில் பிரதேச சபையின் செயற்பாடுகள் திருப்தி அளிப்பதாக இல்லை எனவும், கண்டிப்பான நடவடிக்கை எடுத்துப் போக்கு வரத்தினைச் சீராக மேற்கொள்ள ஆவண செய்ய வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (54)

# போட்டிப் பரீட்சை

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஶ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு ஹரி இளைஞர் மன்றத்தினால் போட்டிப் பரீட்சை ஒன்று நடைபெறவுள்ளது. மேற்படி போட்டிப் பரீட்சையில் பேச்சு, கவிதை, தனிநடனம், பண்ணிசை என்பன இடம்பெறவுள்ளன. இன்று காலை 9 மணிக்கு கோண்டாவில் ஶ்ரீ நாராயண சனசமூக நிலையத்தில் இப் போட்டிப் பரீட்சை இடம்பெற வுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளுமாறு ஹரி இளைஞர் மன்றம் கேட்டுக்கொள்கிறது.

# மேடையேறுகின்றன இரண்டு நாடகங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவராலயத்தின் அனுசரணையுடன் 2 நாடகங்களை மேடையேற்றுகின்றது.

இந்நிகழ்வு நேற்று மாலை கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது. யாழ். திருமறைக்கலாமன்ற இயக்குநர் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் மற்றும் பிரதி இயக்குநர் கே.ஜோன்சன் ஆகியோரின் நெறியாள்கையில் உருவான நாடகங்களே மேடையேற்றப்படுகின்றது. இதில் நேற்று அசோகம் என்ற நாடகம் மேடை ஏற்றப்பட்டது. இன்று மாலை அற்றைத் திங்கள் என்ற நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (உ-எஸ்)

# ஆற்றில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

(பலாங்கொடை)

பலாங்கொடை, மாரதென்ன தோட்டப்பகுதி ஆற்றில் நீராடச் சென்ற 14 வயதான சிறுவன் நேற்று சனிக்கிழமை நண்பகல் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தான். மாரதென்ன தெனிஓயா ஆற்றில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாரதென்ன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## வாழ்க வளமுடன்

**தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்**

**ஒன்பதாவது அகவையில்**



பெயர்: பிரிந்திக்கா,
முகவரி: மீசாலை,
சாவகச்சேரி.

Happy Birthday!

**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**



## சிறு விளம்பரம்

### திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுணடன், அரச நிர்வாகத்துறை, பட்டதாரிகள், சைவபோசனம், வெளிநாடு, அரசு, தனியார், (இந்து, கிறிஸ்தவம்) ஆகிய மணமக்களின் விபரங்களுக்கு அணுகவும். விளம்பரத்துடன் தொடர்பு கொண்டால் பதிவுக் கட்டணம் இலவசம்.

**சிவாலயா சர்வதேச திருமண நிலையம், கெனடிலேன், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

தொ.பே :- 0750741451, 0215681126 (R/048)


# பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. பொதுச்சபைக் கூட்டத்திற்கான அறிவித்தல் சகல பிரிவுகளின் பிரதிநிதிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் கூட்டத்திற்குச் சமூகமளிக்குமாறு யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (70)

# மூன்று மாடி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் மூன்று மாடி கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை திங்கட் கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் ஆகியோர் சிறப்பு விருநதினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-11)

அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். இயற்கை விதியை அனுசரித்து வாழவேண்டும். அடக்கம், பொறுமை, ஜீவ காருண்யம் என்ற குணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஜே.வி.பி. யின் தேர்தல் கால உடைவு?

ஜே.வி.பி. இரண்டாக பிளவுபடுகிறது. புதிய கட்சி உருவாகிறது என செய்திகள் வெளிவந்துள்ள நிலையில், ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும், செயலாளர் ரில்வின் சில்வாவும் கட்சிக்குள் குழப்பம் எதுவும் இல்லை என மறுத்துள்ளனர்.

கட்சியின் உயர்நிலைக்குழு உறுப்பினர் பிறேம்குமார் குணரத்தினம் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடந்த கூட்டம் ஒன்றிலேயே புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்கூட்டத்தில் ஜே.வி.பி யின் 24 பேர் கொண்ட மத்திய குழுவிலிருந்து பெரும்பான்மையோர் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எல்லா இயக்கங்களையும் போலவே ஜே.வி.பி. யிலிருந்தும் பல்வேறு காலகட்டத்திலும் பலர் வெளியேறியிருக்கிறார்கள். ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன், பேராசிரியர் ஜயதேவ உடங்கொட போன்ற ஏராளமான புத்திஜீவிகள் ஆரம்ப காலங்களிலேயே ஜே.வி.பி.க்குள்ளிருந்து வெளியேறியவர்களே. அதன் பின்னரும் இளைஞர்கள் பலர் வெளியேறி சிறு சிறு கட்சிகளாகப் பிரிந்து செயற்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது கிளர்ச்சிக் காலத்தில் தர்மசிறி தலைமையிலான சுயாதீன மாணவர் முன்னணியும் சமீப காலத்தில் பிரிந்த விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன.

இலங்கைக் கம்யூனிஸ்ட் (சீன சார்பு) கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ரோகண விஜேவீர 1965 இல் மக்கள் விடுதலை முன்னணியை நிறுவினார். ஆர்ஜென்டினாவில் பிறந்து, பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து கியூபப் புரட்சியை வென்று, அங்கு வகித்த அமைச்சுப் பதவியை உதறிவிட்டு மீண்டும் மற்றொரு நாட்டில் புரட்சியை ஆரம்பித்து பொலிவியக் காட்டில் மரணமடைந்த சே குவேராவின் பெயரால் 'சே குவேரா இயக்கம்' என்றே விஜேவீரவின் இயக்கம் அழைக்கப்பட்டது.

சோசலிசப் புரட்சி குறித்து அரசியல் வகுப்புக்கள் பலவற்றை இந்த இயக்கம் நடத்தியது. இவற்றால் கவரப்பட்ட படித்த வேலையற்ற கிராமப்புற இளைஞர்கள், மாணவர்கள் பெருமளவாக இணைந்தனர். 1971 மார்ச்சில் ஜே.வி.பி.யின் இரகசிய ஆயுதக்கிடங்கு பற்றி சிறிமாவோ அரசிற்குத் தெரியவர், ரோகண விஜேவீர கைது செய்யப்பட்டார். விஜேவீர யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் இருக்கும்பொழுதே 1971 ஏப்ரலில் இலங்கை அரசிற்கு எதிராக ஜே.வி.பி.யினர் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பல பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. தெற்கின் பல பாகங்கள் ஜே.வி.பி.யின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஆயினும், இந்தியா, சீனா நாடுகளின் உதவியுடன் ஆயுதக்கிளர்ச்சி இரண்டு வார காலத்தினுள் அடக்கப்பட்டது. ஜே.வி.பி உறுப்பினர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி தடை செய்யப்பட்டது.

1977 தேர்தலில் வென்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ரோகண விஜேவீரவை விடுதலை செய்ததுடன் ஜே.வி.பி மீதான தடையினையும் நீக்கினார். 1982 ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி.யின் வேட்பாளராக ரோகண விஜேவீர போட்டியிட்டு 2 இலட்சத்து 75 ஆயிரம் வாக்குகளைப் பெற்றார்.

பின்னர் 1983 ஜூலைக் கலவரத்தையடுத்து மீண்டும் இவ்வமைப்பு தடை செய்யப்பட்டது. 1987–1989 காலகட்டத்தில் இரண்டாம் கிளர்ச்சியை நடத்தினர். பலரைக் கொன்றனர். பிரேமதாச அரசு தலைமறைவாக இருந்த விஜேவீரவையும் மற்றும் பல தலைவர்களையும் கைது செய்து கொன்றது.

1990 ன் பின்னர் ஜே.வி.பி. மீள் கட்டியெழுப்பப்பட்டது. வெளிநாட்டுக்குத் தப்பியோடியிருந்த சோமவன்ஸ அமரசிங்க சந்திரிகா ஆட்சிக் காலத்தில் நாடு திரும்பினார். சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு கூட்டணி ஆட்சி அமைத்தனர். அது மீண்டும் ஜே.வி.பி. யின் வளர்ச்சிக் கட்டமாக அமைந்தது.

ஆனால் அந்த உறவை முறித்துக் கொண்டதுடன், கடந்த தேர்தலில் ஐ.தே.க வுடனும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடனும் கூட்டு வைத்து, அரசியல் ரீதியாகவும் வாக்கு ரீதியாகவும் ஜே.வி.பி. சரிந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொன்சேகாவை ஆதரித்து, போர்க் குற்றச்சாட்டை நிராகரித்தது போலவே, ஜே.வி.பி. யும் தனது இடதுசாரித் தோற்றத்தை வரலாற்றிலிருந்து அழித்தது.

தனது சகோதரரான ஜே.வி.பி மூத்த உறுப்பினர் றஞ்சிதம் 1988 கிளர்ச்சியில் கொல்லப்பட்ட பின்னர், சோமவன்ஸ போலவே நாட்டைவிட்டுத் தப்பி அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்திருந்தவர் பிறேம்குமார் குணரத்தினம் என்று கூறப்படுகிறது. இவர் கடந்த மாதம் இலங்கை வந்ததாகவும், இவரே அதிருப்திக் குழுவினரை ஒன்றிணைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

இவர்கள் தனிக் கட்சி ஒன்றை உருவாக்கி ஒருவேளை பிரிந்து போகலாம். ஆனால் ஜே.வி.பி.யானது, அதனது சிங்களத் தீவிரவாதம், மேற்கு நாடுகள் மீதான எதிர்ப்பு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிர்ப்பு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இந்தத் தீவின் மூன்றாம் கட்சியாகத் தொடரும்.

- ஆசிரியர்

# வவுனியா அரசாங்க ஊழியர்களுக்கு வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல்

(கொழும்பு)

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் அரச ஊழியர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் மகிந்த சிந்தனையில் ஜனசெவன திட்டத்தின் கீழ் வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நிர்மாணத்துறை பொறியியல்துறை சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச அவர்களின் பணிப்புரையின் பேரில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நிர்மாணத்துறை பொறியியல் துறை சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச வவுனியா மாவட்ட அரச அதிபர் அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த வைபவத்தில் 316 ஏக்கர் காணி 40 பேர்ச்சஸ் அளவாக 640 வீடுகள் அமைப்பதற்கு அரச ஊழியர்களிடம் வழங்கப்பட்டது.

அத்துடன் காணிகளுக்கான உறுதியும் கையளிக்கப்பட்டதுடன் வீட்டு மனைகள் அமைப்பதற்கான 5 இலட்சம் ரூபா கடன் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு வருகை தந்த அமைச்சர் மற்றும் அதிகாரிகள் தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி மங்கள வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்பட்டனர்.

ஜனசெவன திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 10 இலட்சம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# வேலை பெற்றுத்தருவதாகக் கூறி யுவதியுடன் பாலியல் வல்லுறவு

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்து திருகோணமலையிலிருந்து 18 வயதுக்குக் குறைந்த யுவதியொருவரை கொழும்புக்கு அழைத்து வந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு உப முகவர் ஒருவரை அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

திருகோணமலையைச் சேர்ந்த பெண்ணொருவர் செய்த முறைப்பாட்டையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரைக் கைது செய்தனர்.

மேற்படி பெண் பொலிஸாரிடம் தெரிவித்த முறைப்பாட்டில், தான் 18 வயதுக்குக் குறைந்தவராக இருந்தபோது திருகோணமலையில் ஆடைத் தொழிற்சாலையொன்றில் வேலை செய்ததாகவும் அங்கு தனது நண்பர் ஒருவரால் குறித்த நபர் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அம்முறைப்பாட்டின்படி, அந்த யுவதியின் வீட்டிற்கு சென்ற நபர் யுவதிக்கு மத்திய கிழக்கில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாக தாயாரிடம் கூறியுள்ளார்.

தனது மகளுக்கு 18 வயதாகவில்லை என்பதால் கடவுச்சீட்டுப் பெறமுடியாது என அத்தாயார் கூறியபோது, போலி பிறப்புச் சான்றிதழ் பெற்று கடவுச்சீட்டு பெறலாம் என கூறியுள்ளார். இதற்காக அந்த யுவதி கொழும்புக்கு அனுப்பப்பட்டார். கொழும்பில் தனிமையான வீடொன்றுக்கு யுவதியை அழைத்துச் சென்ற சந்தேக நபர், அந்த யுவதியின் முகத்தில் கைக்குட்டையொன்றை வைத்து மயக்கமடையச் செய்த பின் அவரை வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார். அதன்பின்னரும் அவரை வல்லுறவுக்குட்படுத்திய சந்தேகநபர் பின்னர் வேலைவாய்ப்பு முகவர் நிலையமென்றுக்கு அழைத்துச் சென்றார். பல தடவைகள் கொழும்பிலுள்ள வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு அப் பெண்ணை சந்தேக நபர் அழைத்துச் சென்றுள்ளார். இறுதியில் தான் கர்ப்பிணியாக இருப்பதை உணர்ந்த யுவதி இது குறித்து தனது தாயிடம் கூறியுள்ளார்.

சந்தேக நபரிடம் தாயார் இது குறித்து விசாரித்தபோது, கருச்சிதைவு செய்து கொள்ள அறிவுறுத்தியதுடன் ஒரு இலட்சம் ரூபா பணம் கோரியுள்ளார். அச் செலவை தாங்கமுடியாதென்பதால் குழந்தையை தத்தெடுத்துக்கொள்ள தாயார் தீர்மானித்துள்ளார்.

எனினும் ஒரு இலட்சம் ரூபா பணம் தருமாறு தாயாரை அச்சுறுத்திய சந்தேக நபர், இல்லாவிட்டால் போலி பிறப்புச் சான்றிதழ் குறித்து, பொலிஸாரிடம் தெரிவிக்கப்போவதாக அச்சுறுத்தியுள்ளார். இது தொடர்பாக வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள், அந்நிலையங்களின் ஊழியர்கள் மற்றும் பலரிடமிருந்து தாம் வாக்குமூலங்களை பெற்றிருப்பதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றிற்குத் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தின் தற்போதைய தோற்றம் இலத்திரனியல் வரைபடம் உருவாக்கம்

(கொழும்பு)

யாழ்பாண மாவட்டத்திற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் இலங்கை அளவைத் திணைக்களமும் இணைந்து இலத்திரனியல் வரைபடம் ஒன்றை உருவாக்கியுள்ளன. இவ் வரைபடம் பொருளாதார அபிவிருத்தியமைச்சருக்கு நாடாளுமன்றத்தில் வைத்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் வரைபடத்தை உருவாக்குவதற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியமைச்சு கடந்த வருடம் இணக்கப்பாட்டிற்கு வந்தது.

இது தொடர்பில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் 616 மில்லியன் யென் வழங்குவதற்கு முன்வந்ததாக பொருளாதார அபிவிருத்தியமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு. பிரதேசங்கள் தொடர்பில் காணப்படும் வரைபடங்கள் பல வருடக்கணக்கு பழமை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வரைபடங்களை யுத்த சூழ்நிலையால் புதுபிக்க முடியவில்லை என அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அளவை திணைக்களத்தால் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நன்கொடைக்கிணங்க உருவாக்கப்பட்ட இவ் இலத்திரனியல் வரைபடம் விமான புகைப்படங்களைப் பயன்படுத்தி தொடர்பாடல் தொழிநுட்பத்திற்கிணங்க உருவாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் உருவாகியுள்ள காணி உரிமைப் பிரச்சினைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணி உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது காணிச்சட்டத்தின் பிரகாரம் சகல காணிகளையும் மீள் பதிவு செய்து கிராம அலுவலர்கள் ஊடாக புதிய காணி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஒரு காணிக்கு உரிமை கோரி ஒன்றிற்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்கும் நிலை அதிகத்துக் காணப்படுகின்றது.

பல வருடங்களாக காணிகளை கைவிட்டும் மற்றையவர்களுக்கு ஒப்படைத்துவிட்டும் வெளிநாடு மற்றும் பிற மாவட்டங்களில் வசித்து வரும் பலரும் இக்காணிகளுக்கு உரிமைகோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர்.

இது தவிர ஐம்பது வருடங்களுக்கு மேலாக காணிகளை ஏனையவர்களுக்கு ஒப்படைத்துவிட்டு எவ்வித காணி உரிமமும் கோரமாட்டோமென உறுதிப்படுத்திக் காணித்திருத்தச் செலவைப் பெற்றுச் சென்றவர்களும் தற்போது காணிகளுக்கு உரிமை கோரியுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி நீதிமன்றில் காணி உரிமைப் பிரச்சினை சம்பந்தமான பல வழக்குகள் விசாரணையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பனங்களியிலிருந்து பெறப்படும் உற்பத்திக்கு புதிய தொழில்நுட்பத்தை வழங்க நடவடிக்கை

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்


(வவுனியா)

பனை வளம் நிறைந்து காணப்படும் இம்மண்ணில் அதன் பயனைப் பெறுவோரின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே உள்ளது. பனை வளப் பயன்பாட்டினை முன்னெடுக்க முனைந்துள்ள நிறுவனங்களைப் பாராட்ட வேண்டும். அந்த வகையில் வளம் நிறைந்த பிரதேசத்தினைத் தெரிவு செய்து Seed நிறுவனத்தினருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சிவரத்தினம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் கனகராயன்குளம் கிராமத்தில் பனை அபிவிருத்திச் சபை Seed நிறுவத்தின் அனுசரணையில் அப்பகுதியில் மீள் குடிமர்ந்த மக்களின் வாழ்வாதாரத் திட்டமான பனங்கைப்பணிப் பயிற்சி நெறி கனகராயன்குள திட்ட அணிப்பிரதி நிதி எஸ். ஞானசூரியன் தலைமையில் 20 யுவதிகளுக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்குப் பிரதம அதிதியாக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

இப்பயிற்சி நெறியினை ஆரம்பிக்கும் பனை அபிவிருத்திச் சபையானது பயிற்சி வழங்குவதோடு மட்டுமல்லாது, அப்பொருட்களுக்குரிய சந்தை வாய்ப்பையும் வழங்கி வருகின்றது. உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கென 'சிறுசுவடுகள்' எனும் உற்பத்திக் கட்டமைப்



பொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் கா. கோபாலகிருஸ்ணன், வவுனியா மாவட்ட இணைப்பாளர் மு. தர்மகுலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வளன்புரம் வீதியை புனரமைக்க நடவடிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு வளன்புரம் வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக புனரமைப்பு இன்றி இருக்கும் இந்த வீதியின் குறுக்கு வீதிகள் அனைத்துமே மிகவும் சேதமுற்றுக் காணப்படுகின்றன.

தற்போது இந்த வீதியை தார் ஊற்றி புனர்நிர்மாணம் செய்வதற்கு யாழ். மாநகராட்சி மன்றம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (வி)

## கூட்டுறவு தின விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் 89ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும் கௌரவிப்பு விழாவும் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சமாசக் கூட்ட மண்டப்பத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த. சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் 2009, 2010 ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு, 89ஆவது சர்வதேசக் கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றோர் கௌரவிப்பு மற்றும் 2009, 2010ஆம் ஆண்டுக்கான சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளன.

மேலும் 89ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு சங்கங்களால் தமது அங்கத்த வருக்கென அமைக்கப்பட்ட வீடுகளை உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (உ)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மேலும் சில பாடசாலை முடிவுகள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிந்தி யடைந்த மேலும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:

**யாழ். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி** சீ. சரண்யா 179, ம. சங்கவி வே. யுவஸ்திகா 174, கி. நஜிதா 165, செ. ஹம்சாயினி 159, அ. டிலக்சனா 158, ந. திவாஜினி 157. **யாழ். புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை** ம. லலிதம்பிகை 178. **யாழ். கரவெட்டி விக்கினேஸ்வரா ஆரம்பப் பாடசாலை** ஜெ. அன்ரனி சுயாந் 169. (109)


## மருந்து விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருந்துக் களஞ்சியத்தில் இருந்து யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வைத்தியசாலைகளுக்கும் 'ஜீவனி' மருந்துப் பைகள் வழங்கப்பட்டு வருவதாக மருத்துவக் களஞ்சிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காய்ச்சல், சத்தி மற்றும் வயிற்று வலி காரணமாகப் பாதிக்கப்படும் நோயாளர்கள் தமது இழந்த சக்தியை மீளப் பெறுவதற்காக இம்மருந்து அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இதேவேளை, இந்நோய்த் தாக்கத்துக்குள்ளான நோயாளர், குருநகர் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் செல்பவர களுக்கும் வைத்திய அதிகாரியின் ஆலோசனையின் பிரகாரம் ஜீவனி மருந்துப் பைகள் வழங்கப்பட்டு வருகின்றது. (39)



மன்னாரில் நடைபெற்ற செய்மதி உபகரணம் இயக்குதல் பயிற்சி நெறி நிகழ்வில் யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி உதவிப் பணிப்பாளர் இ. செபஸ்தியாம்பிள்ளை பயிற்சியாளர்களுக்கு விளக்கமளிப்பதைக் காணலாம். (68)

## இரவு வேளைகளில் அடிக்கடி தடைப்படும் மின்சாரம்

### விசனமடையும் மாணவர்கள்

(கோப்பாய்)

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த மின்சாரம் பிற்பகல் 6.00 மணியில் இருந்து 8.00 மணி வரைக்கும் தடைப்படுவதால் பிரதேச மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்பக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாரத்தில் அடிக்கடி முழு நாள் மின்சாரத் தடை ஏற்படுவதோடு இப்பகுதியில் உள்ள அநேகமான தொழில் நிலையங்களின் பணிகள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அந்தச் சமயத்தில் இரவிலும் இவ்வாறு மின்சாரத் துண்டிப்பு திடீர் திடீரென இடம்பெறுவது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் இந்த மின்சாரத் தடையைப் பயன்படுத்தி இப்பகுதியில் திருடர்களின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வி)

## படிப்படியாக குடியேறும் வலிவடக்கு பகுதி மக்கள்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு தெல்லிப்பளை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தனியார் குடியிருப்புகள் உரியவர்களால் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து பல வருடங்களுக்குப் பின்னர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள இப்பிரதேசத்தில் மக்கள் படிப்படியாக குடியேறி வருகின்றனர். இதில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் முன்னால் உள்ள சில வீடுகளில் மக்கள் குடியேறி வருகிறார்கள். அத்துடன் இவ்வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள அம்மன் கோயிலும் தற்போது திருத்தியமைக்கப்படுகிறது. (39)




கடந்த புதன்கிழமை நடைபெற்ற கொலம்பகம் சென் ஜோசப் வித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இடம்பெற்ற கலை நிகழ்வைக் காணலாம். (21)

## நல்லூர் பிரதேச சபையின் இரு நாள் கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலாசார விழா எதிர்வரும் 30, 01ஆம் திகதிகளில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நல்லூர்ப் பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமான பா. செந்தில் நந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

**முதலாம் நாள் நிகழ்வுகள்**

30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சித்தாந்த பாரதி சிவராமலிங்கபிள்ளை அரங்கில் நல்லூர் உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகவும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் பேராசிரியர் வி.க. கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். பேராலய பங்குத் தந்தை ஆர். எச். சகாயநாயகம் ஆகியோர் வழங்கவுள்ளதுடன் யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனமும்

நல்லூர் சாரங்கா இசை மன்ற மாணவி ர. ஸகிஸ்னா மற்றும் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் இசையரங்கும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் செல்வன் சி. சிவாம்கனின் பேச்சும்

யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனத்தைத் தொடர்ந்து புலரும் பொழுதும் புனித உணர்வும் என்னும் விடயம் பற்றி கவியரங்கும் அரியாலை பத்மா கலா மன்றம் நடத்தும் மயான காண்டம் இசை நாடகமும் இடம் பெறவுள்ளது.

**இரண்டாம் நாள் நிகழ்வுகள்:**

முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கலாபூஷணம் வி.கே. கானமூர்த்தி அரங்கில் நல்லூர்ப் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ் இந்தியத் துணைத் தூதுவராலய துணைத் தூதுவர் வ. மகாலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், வடமாகாண கலா சாரத் திணைக்களப் பணிப்பாளர் என். ஸ்ரீதேவி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், கலாபூஷணம் உ. இராதாகிருஷ்ணன் மற்றும் மாணவிகள் திருமதி சைந்தவி செல்வி யோ. கார்த்திகா குழுவினர் வழங்கும் வயலின் சோலோ ஆகியன இடம்பெறவுள்ளது. திருமதி ரா. அகல்யாவின் நெறியாள்கையில் நிருத்யாஞ்சலி நாட்டிய நிகழ்ச்சியும்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு கலைஞானச்சுடர் நூலை ஆறிமுகம் செய்து வைக்கவுள்ளார். தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பும், நல்லூர் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் வழங்கும் வடமோடி நாட்டுக்கூத்து (மகாபாரதப் போர் 17ஆவது நாள்) இடம்பெறவுள்ளது.(உ)

# கண்காட்சி காட்சிப்படுத்தலுடன் நிற்காமல் புத்தாக்கங்களையும் வெளிக்கொணரவேண்டும்

## விஞ்ஞான பிரதிக்கல்விப்பணிப்பாளர் கதிர்காமநாதன்

(அச்சுவேலி)

புத்தாக்கச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபட வைப்பதன் மூலம் அவர்களின் அறிவுத் திறணை மேம்படுத்திக்கொள்ளக கூடியதாய் இருப்பதுடன் அவர்களது எதிர்கால வளர்ச்சியையும் விருத்தியடைச் செய்து கொள்ள முடியும் இதற்காக மாணவர்கள் புத்தாக்கச் செயற்பாடுக்ள் மற்றும் கண்காட்சிகள் போன்றவற்றில் விருப்புடனும் ஆர்வமுடனும் தாமாகவே முன்வந்து பங்கு பற்றுவதன் மூலம் வினைத்திறன் மிக்க ஓர் எதிர்கால கல்விச் சமூகத்தை உருவாக்கமுடியும் என யாாழ்ப்பாண கல்வி வலய விஞ்ஞான பிரதிக் கல்விப் பணிப்பாளர் கதிர்காமநாதன் தெரிவித்தார்.

அண்மையில் கோப்பாய்க் கோட்ட விஞ்ஞான ஆசிரியர்களுடன் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஆக்கங்கள் என்பவை வெறுமனே காட்சிப்படுத்துவனவாக மட்டும் இருக்கக்கூடாது அவை சரியான விஞ்ஞான எண்ணக்கருவைக் கொண்டிருப்பதுடன் இயங்கு தன்மையும் கொண்டிருத்தல் வேண்டும் அப்போது தான் அது முழுமைத் தன்மையினைப் பெறும் கண்காட்சிகள் என்பது தனியே காட்சிப்படுத்தலை மட்டும் மையமாகக் கொண்டிருக்காது புத்தாக்கங்களையும் வெளிக்கொண்டுவருவதற்குரிய ஓர் செய்பாடாக இருத்தல் வேண்டும் புத்தாக்கங்கள் காலத்திற்குக் காலம் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் ஆக்கப்படுவதும் அவை செலவிற்குச் சிக்கனமானவையாகவும் இருக்க வேண்டியதுடன் புதியவையாகவும் இருத்தல் வேண்டும் இதற்கு ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்கப் படுத்த வேண்டும் இதன் மூலம் எமது மாணவர்கள் தேசிய ரீதியிலான சான்றிதழ்களையும் விருதுகளையும் பெற்று சாதனையாளர்களாகத் திகழவேண்டும் என்றார். (3)

# வடமராட்சி கிழக்கு மக்களால் கைவிடப்பட்ட கடற்தொழில் உபகரணங்கள் கையளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மக்களினால் கடந்த யுத்த அனர்த்தங்கள் மற்றும் இடப்பெயர்வுகளின் போது கைவிடப்பட்ட ஒரு தொகுதி கடற்தொழில் உபகரணங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த பின் தமக்குரிய படகுகளை தந்துதவுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை அடுத்தே இவை வழங்கப்பட்டுள்ளன.

இவ் உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வில் இதில் 55ஆவது படையணி தலைமை அலுவலகப் பொறுப்பாளர் பிரிகேடியர் பிரதம விருந்தினராகவும்,ஆழியவளை முகாம் பொறுப்பாளர் மேஜர் றாஜீவ் சிவில் அலுவலகப் பொறுப்பாளர் லெப்.கேணல் ஜானக பீ சில்வா, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன், மற்றும் யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் இ.ரவீந்திரன் தாளையடி பங்குத்தந்தை ஜேம்ஸ்நாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு உரிமையாளர்களுக்கு இவ் உபகரணங்களை வழங்கிவைத்தனர்.

இதில் 69 படகுகளும் 02 வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டன. (70)

# ரெலிக்கொம் நிறுவனத்தின் நடமாடும் சேவை

(யாழப்பாணம்)

யாழ்.ரெலிக்கொம் நிறுவனம் குடாநாட்டில் நடமாடும் சேவை மூலம் தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் இம் மாதம் 30 ஆம் திகதி வரை இடம்பெற்றுவரும் இந்த நடமாடும் சேவை மூலம் இணைப்புக்கள் குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

இணைப்புக்களை பெறுவோருக்கு குடை மற்றும் தொப்பி என்பன அன்பளிப்பாகவும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நடமாடும் சேவை மூலம் தொலைபேசி இணைப்பு வசதிகள் உடனுக்குடன் வழங்கப்பட்டும் வருகின்றன.

இந்தச் சலுகை எதிர்வரும் 30ஆம் திகதி வரைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை மூலம் சீ.டி.எம்.ஏ தொலைபேசிகளும் விக்கப்பட்டு வருகின்றன. (வி)



கிளிநொச்சி மக்கள் வங்கியின் 2ஆவது நகரக்கிளை அண்மையில் கிளிநொச்சி ஏ9 வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொதுமுகாமையாளாருமான என்.வசந்தகுமார் வங்கிக் கிளையின் நடாவை வெட்டித்திறந்து வைப்பதை காணலாம். (29)

# வீதி விபத்துக்கள் அதிகரிப்பு வைத்தியசாலைகளில் இடநெருக்கடி

(யாழப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வீதி விபத்துக்கள் தற்போது சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றன. இவ் விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

போக்குவரத்து நடைமுறைகளை மீறி, சிலர் அதி வேகத்தில் வாகனங்களைச் செலுத்துவதால் அவை வேகக் கட்டுப்பாட்டை மீறி விபத்து நேரிடுவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் கைத்தொலைபேசியில் உரையாடியபடி அதிவேகத்தில் செல்லுவதால் அவை திடீரென கட்டுப்பாட்டை மீறி விபத்துக்கு இலக்காவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க சிலர் போக்குவரத்து விதியை மீறி இரவு வேளைகளில் மது அருந்தி விட்டு வாகனங்களை செலுத்துவதாலும் அவை கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு இலக்காகி இதனால் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இவ்வாறு குடாநாட்டில் வீதி விபத்துக்கள் சடுதியாக அதிகரித்துள்ளதால் இவ் விபத்துக்களினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

# மரக்கறிச்சந்தையில் இலையான் தொல்லை

(திருநெல்வேலி)

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் இலையானின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தெண்பகுதியில் இருந்து கூலர் வாகனம் மூலம் கொண்டவரப்படும் உருளைக்கிழங்கு மற்றும் மரக்கறி வகையினால் ஏற்படும் குளிர்த் தாக்கத்திற்கு இந்த ஈக்கள் அதிகரித்துக் காணப்படுவதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். (வி)

# வலிவடக்கு கீரிமலைப் பகுதிகளில் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பு

(மாவிட்டபுரம்)

கீரிமலைப் பகுதியில் வலி.வடக்குப் பிரதேச சபையினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட விருப்பதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வலி.வடக்கில் தற்போது மீள்குடியமரும் மக்களின் தேவைகள் கருதியும்,கீரிமலைப் பகுதிக்கு தினமும் பெருமள விலான சுற்றுலாப் பயணிகள் சென்று வருவதனால் அவர் களது தேவைகளையும் கருத்தில் கொண்டே இந்த அபிவிருத் தித்திட்ட வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

அப்பகுதிகளில் போதியளவு மலசலகூடங்கள் அமைத்து அங்கு சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் நீர்த் தாங்கிகள், கிணறுகள் தோண்டுதல் போன்ற பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இவைகள் அமைக்கப்பட்ட பின் சுற்றுலாப் பயனாளிகளும் அங்குள்ள ஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்களும் பெரிதும் நன்மை அடைவார்கள் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (54)

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

**(25.09.2011 – ஞாயிற்றுக்கிழமை)**

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
புரட்டாதி 08 ஆம் நாள்.
இராகுகாலம் 4.32-6.02, சுபநேரம் 9.02 -10.32,
நட்சத்திரம்: மகம் மு.இ. 9.06 வரை
திதி: திரயோதசி மு.இ 9.54 வரை
பிரதோஷ விரத நன்னாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணக்கஷ்டம், காரிய நஷ்டம், அமைதியின்மை, குடும்பத்தில் குழப்பம், நண்பர் தொல்லை.

**ரிஷபம:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், அதிகாரப் போட்டி, சுற்றத்தார் ஆதரவு, சகோதரபாசம்.

**மிதுனம் :**– பணமுடை, குடும்பத்தில் கவலை, தொழில் முடக்கம், பிணக்குத்தீர்த்தல், தேக சுகக்குறைவு.

**கடகம்:**– குடும்பத்தில் மகிழ்ச்சி பணம் வரும் பெரியயோர் ஆசி, உற்சாகமான வரவேற்பு, தொழில் வெற்றி.

**சிம்மம்:**– பணக்கஷ்டம், வீண் அலைச்சல், அநீதியிழைத்தல், கடன் படல், நினைத்ததைச் சாதித்தல்.

**கன்னி :**– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், தானதர்மம் செய்தல், தொழில் வெற்றி, சுற்றத்தார் ஆதரவு.

**துலாம் :**– பணமுடை, பிணக்கு ஏற்படல், முக்கிய முடிவுகள், நண்பர் விமர்சனம், தேக சுகக்குறைவு.

**விருச்சிகம்:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம்வரும், மன நிம்மதி, சுற்றத்தார் ஆதரவு, தேக ஆரோக்கியம்.

**தனுசு:**– பணமுடை, உடல் உபாதை, வசதிக்குறைவு, அதிகாரப்போட்டி, கடன் படல்.

**மகரம:**– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், வாய்ப்பு இழத்தல் வசதிக் குறைவு, நினைத்ததைச் சாதித்தல்

**கும்பம் :**– பணம் வரும், .குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை, வெளிநாட்டு உதவி, அதிகாரப் போட்டி.

**மீனம் :**– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், பிணக்குத்தீர்த்தல், தொழில் முடக்கம், மனக் கவலை.

# கலைஞானச் சுடர் விருது பெறுவோர்

(யாழப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப்பேரவையால் 2011 ஆம் ஆண்டுக்கான கலைஞானச் சுடர் விருது பெறுவோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் செல்லப்பா நடராசா ஊடகத்துறைக்கும், ம.பார்வதிநாதசிவம் கவிதைக்கும், திருமதி சந்திரா சரவணமுத்து கிராமியக் கலைக்கும், ஆ.கந்தசாமி சிற்பக்கலைக்கும், க.சுந்தரலிங்கம் ஓவியக்கலைக்கும், திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் புனைக்கதைக்கும், தம்பு சிவலிங்கம் நாடகத்துறைக்கும் வி.சிவஞானசேகரம் கர்நாடக இசைத்துறைக்கும், வி.கே.பஞ்ச மூர்த்தி நாதஸ்வரக் கலைக்கும், செ.திருநாவுக்கரசு இலக்கியத்திற்கான விருதையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (உ)

# புத்தூர் வித்தியாலய குறைபாடுகளை நேரில் கேட்டறிந்தார் ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வித்தியாலயத்திற்கு நேற்றுமுன்தினம் திடீரென விஜயம் செய்த வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வித்தியாலய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்கள் மற்றும் அதிபர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன் பாடசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறை குறிப்பாகத் தளபாடம், கணினி, பாடசாலையைப் புனரமைப்புத் தொடர்பாக எடுத்துக் கூறினார்.

இதனை அறிந்த ஆளுநர் உடனடியாக அன்றைய தினம் மாணவர்களுக்கு கதிரை மேசைகள் மற்றும் கணினிகளையும் வழங்கியதுடன் பாடசாலைத் திருத்த வேலைக்கென 50 ஆயிரம் ரூபா காசோலையையும் வழங்கினார்.



அத்துடன் வித்தியாலய மாணவர்கள் பாதணிகள் இல்லாது நிற்பதைக் கண்ட ஆளுநர் உடனடியாக ஒரு தொகுதி பாதணிகளைக் கொள்வனவு செய்து மாணவர்களுக்கு வழங்குமாறு அவற்றைக் அதிபரிடம் கையளித்தார். (உ,எஸ்)



மல்லாகம் ஸ்ரீமுகன் அணியினர்



கொக்குவில் ஸ்ரீ காமாட்சி அணியினர்

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இன்றைய இறுதிப் போட்டியில் மோதவுள்ள மல்லாகம் ஸ்ரீமுகன் அணியினரையும், கொக்குவில் ஸ்ரீ காமாட்சி அணியினரையும் காணலாம். இப்போட்டி அளவெட்டி பாரதி விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளைய ஆட்டம்

(நெல்லியடி)

வல்லை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால், பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடனும், தினமுரசு நாளிதழின் ஊடக அனுசரணையுடனும் நடத்தப்பட்டு வரும் கால்பந்துத் தொடரில் நாளை போட்டியில் மோதவுள்ள அணிகள் வருமாறு:

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் முதலாவது போட்டியில் வல்லை ஆதிசக்தி அணியை எதிர்த்து வதிரி பொம்மேர்ஸ் அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது போட்டியில் றேஞ்சஸ் அணியை எதிர்த்து சிவானந்தா அணியும் மோதவுள்ளன. இரு போட்டிகளிலும் முக்கியம் மிக்க போட்டியாக அமையவுள்ளதால் விறுவிறுப்பான போட்டியாக இவ் ஆட்டங்கள் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (12)

## காலிறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி மற்றும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான காலிறுதிப் போட்டி நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் கிரிக்கெட் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இரு கல்லூரிகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற காலிறுதிப் போட்டி கடந்த 18ஆம் திகதி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டி சமநிலையில் நிறைவு பெற்றால் மீளவும் போட்டியை நடத்த போட்டி ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்தனர்.

இதற்கு அமைவாக இரு அணிகளுக்குமிடையிலான காலிறுதிப் போட்டி நாளை மறுதினம் கொழும்பு வேல்ஸ் கல்லூரி மைதானத்தில் மீண்டும் நடைபெறவுள்ளது.

காலிறுதிப் போட்டியில் இரு கல்லூரி அணிகளும் மீண்டும் மோதவிருப்பதால் இப்போட்டி மிகுந்த சவால் நிறைந்த ஆட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நக்கீரன், பருத்தித்துறை ஐக்கியம் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி

(நெல்லியடி)

வல்வை யங்மென்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கால்பந்துத் தொடரில் அல்வாய் நக்கீரன் அணியும், பருத்தித்துறை ஐக்கிய அணியும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடனும் தினமுரசு நாளிதழின் ஊடக அனுசரணையுடனும் இக்கால் பந்தாட்டத் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் அல்வாய் நக்கீரன் அணியை எதிர்த்து சென் பீற்றர்ஸ் அணி மோதியது ஆட்டம் தொடங்கியபோதே இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக மோதின. அப்போது முற்பாதி ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் சென் பீற்றர்ஸ் அணி வீரர் தமது அணிக்காக முதலாவது கோலைப்போட முற்பாதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் சென்பீற்றர்ஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது நக்கீரன் அணியினர் மிகச் சிறப்பாக முன்னேறி விளையாடினர். இதனால் 18ஆவது நிமிடத்தில் அவ்வணி வீரர் ஒரு கோலைப் போட கோல் கணக்கு சமநிலை பெற்றது. அதன் பின்னர் இரு அணிகளும் மிகவும் உற்சாகத்துடன் விளையாடியபோதும் கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால் ஆட்டம் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நக்கீரன் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து 4.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டமொன்றில் வல்வை கருணாகரன் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய அணி மோதியது.

இவ்வாட்டம் ரசிகர்கள் கண்களுக்கு பெருவிருந்தாக அமைந்தது. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதனை வெளிப்படுத்தும் வகையில் ஆடினர். அப்போது 18ஆவது நிமிடத்தில் தமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பை பருத்தித்துறை ஐக்கிய அணி வீரர் ஜீவன் முதலாவது கோலைப் போட முற்பாதி ஆட்டம் நிறைவடைந்தது.

பிற்பாதி ஆட்டம் தொடங்கியபோது இரு அணிகளும் தமது ஆட்ட வியூகங்களை மாற்றி மாற்றி விளையாடினர். அப்போது 39ஆவது நிமிடத்தில் வல்வை கருணாகரன் அணியைச் சேர்ந்த வீரர் விஸ்தன் மிகச் சிறப்பான கோல் ஒன்றைப் போட்டு அசத்த பருத்தித்துறை ஐக்கிய அணியினர் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

அதன் பின்னர் ஆட்டம் மேலும் சூடுபிடித்தபோதும் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் பருத்தித்துறை ஐக்கிய அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றிற்கு முன்னேறியது. (12)

ஊடக அனுசரணை : தினமுரசு




கரவெட்டி ஞானம்ஸ் அணியினர்



திருநாவலூர் அணியினர்

அமரர் பிரபாகரன் நினைவு மென்பந்துத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட 15 ஓவர்கள் கொண்ட மென்பந்துத் தொடரின் இறுதிப் போட்டிக்கு கரவெட்டி ஞானம்ஸ் அணியும், திருநாவலூர் அணியும் மோதவுள்ளன. இரு அணிகளுமே பலமான அணி என்பதால் இப்போட்டி மிகுந்த பரபரப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (62)



விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் மென்பந்துத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் உபயகதிர்காமம் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டியில் ஆடவுள்ள உபயகதிர்காமம் அணியைக் காணலாம். (62)

## மாவட்ட மட்ட சதுரங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சதுரங்க வீர, வீராங்கனைகளுக்கான சதுரங்கப் போட்டி ஒன்று எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஒக்டோபர் 1,2ஆம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச சதுரங்கப் போட்டிகளுக்கு வீர, வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் நோக்கில் இப்போட்டித் தொடர் நடத்தப்படுகின்றது எனவும், இதில் யாழ். மாவட்டத்திலுள்ள சதுரங்க வீர, வீராங்கனைகளை பங்குபற்றி திறமைகளை வெளிப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்போட்டித் தொடர் யாழ். மாவட்ட சதுரங்கச் சங்கத்தால் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிறிமியர் லீக் தொடருக்கு றோயல், பாடுமீன் தகுதி

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படவுள்ள பிறிமியர் லீக்கின் மூன்று வெற்றிக் கிண்ணக் கால்பந்துத் தொடரில் யாழ். லீக் சார்பாக ஊரெழு றோயல், குருநகர் பாடுமீன் அணிகள் தகுதி பெற்றுள்ளதாக யாழ். லீக் கால்பந்தாட்ட வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றுக் கொண்ட ஊரெழு றோயல் மற்றும் குருநகர் பாடுமீன் அணிகள் மேற்படி தொடரில் பங்கு பற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.சீ.சீ.விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் முக்கியமான காலிறுதிப் போட்டி ஒன்றில் யாழ். சென்றல் அணியும், கே.சீ.சீ. அணியும் இன்றைய தினம் மோதவுள்ளன.

இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் பலம் வாய்ந்த அணிகள் என்பதால் இப்போட்டி ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வெற்றிக்காக இரு அணிகளுமே இறுதி வரை போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (07)

# மே.தீவு அணியுடனான ருவென்ரி - 20 அபார வெற்றி பெற்றது இங்கிலாந்து



(லண்டன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி 20 தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சார்லஸ் 36, ஸ்மித் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போபாரா நான்கு, ஆர். பட்டேல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியில் அணியை வழிநடத்திய சுழற் பந்து வீச்சாளர் ஸ்வான் ஒரு விக்கெட்டை மட்டுமே கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து அணி, 15.2 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஹேல்ஸ் 48 பந்துகளில் 8 பவுண்டரிகள் ஒரு சிக்சர் அடங்கலாக 62 ஓட்டங்களையும், கீஸ்வொட்டர் 49 பந்துகளில் 3 பவுண்டரிகள் 2 சிக்சர் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பந்து வீச்சில் அசத்திய போபாரா தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ருவென்ரி 20 போட்டி இன்று ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்தரின் கருத்து குறித்து ஹர்பஜன், கம்ப்ளி எதிர்ப்பு





(மும்பை)

சச்சின் குறித்து அக்தர் தனது சுயசரிதைப் புத்தகத்தில் தெரிவித்திருந்த கருத்திற்கு ஹர்பஜன்சிங் மற்றும் வினோத் கம்ப்ளி ஆகியோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

**ஹர்பஜன்சிங்**

புத்தகத்தில் அக்தர் என்ன எழுதியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் டெண்டுல்கர் பற்றி பேசினால், அவர் இந்தியாவில் மட்டும் அல்ல, உலக அளவில் தலைச்சிறந்த வீரர் என்று சொல்வேன். உலகில் எந்த ஒரு சர்வதேச வீரரிடம் கேட்டாலும், டெண்டுல்கர் சிறந்த தொடக்க ஆட்டக்காரர், ஆட்டத்தை வெற்றிகரமாக முடிக்கக்கூடியவர் என்று சொல்வார்கள். இன்னும் அவர் அபாரமாக விளையாடிக் கொண்டிருக்கிறார் என ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.

**வினோத் கம்ப்ளி**

அக்தரோ அல்லது எந்த ஒரு வீரரையோ கண்டு டெண்டுல்கர் அச்சப்பட்டதில்லை. டெஸ்ட் போட்டி மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் டெண்டுல்கர். இந்த சாதனையை யாரும் நெருங்கவில்லை. அப்படி இருக்கும் போது அவரைப் பற்றி அறிந்த ஒருவரும் இது போன்று கூற மாட்டார்கள் என வினோத் கம்ப்ளி தெரிவித்தார்.

இதேவேளை, அக்தரின் கூற்றுக் குறித்து கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என சச்சின் டெண்டுல்கர் குறிப்பிட்டுள்ளார்.

தனது பந்து வீச்சைக் கண்டு சச்சின் டெண்டுல்கர் பயந்தார் என்றும், போட்டியை வெற்றிகரமாக முடிக்கத் தெரியாதவர் என்றும் அக்தர் தனது சுயசரிதைப் புத்தக்கத்தில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதியில் சாய்னா அவுட்



(டோக்கியோ)

ஜப்பானில் நடைபெறும் பட்மின்ரன் தொடரில் ஜேர்மனி வீராங்கனையிடம் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் அரையிறுதிப் போட்டியில் தோல்வி தழுவினார்.

ஜூலியன் ஷென்க் என்ற ஜேர்மனி வீராங்கனை நேற்று நடைபெற்ற அரையிறுதியில் 27- 18, 21- 10 என்ற செட் கணக்கில் சாய்னாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதற்கு முன்னர் 7 முறை ஜூலியன் ஷென்க்கை சந்தித்த சாய்னா அதில் 5 முறை வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நெருக்கடியான போட்டி அட்டவணை மாற்றம் வேண்டும் என்கிறார் முர்ரே!

(லண்டன்)


தொடர்ந்தும் ஆடும் வகையில் ரென்னிஸ் போட்டி அட்டவணை உள்ளது. இதனை ரென்னிஸ் சங்கம் மாற்றிக் கொள்ளாவிட்டால் முன்னணி வீரர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகும் என ஆன்டி முர்ரே தெரிவித்துள்ளார்.

அதிக போட்டிகளில் விளையாடுவதைக் காரணம் காட்டி கடந்த 1972ஆம் ஆண்டு 79 ரென்னிஸ் வீரர்கள் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரைப் புறக்கணித்தனர்.

இதன் காரணமாக ஆண்டு நான்கு கிராஸ்ட்லாம் உட்பட 65 முதல் 50 தொடர் வரை கட்டாயம் ரென்னிஸ் வீரர்கள் பங்குபற்றவேண்டும் என்று சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் முடிவெடுத்தது.

இவ்வாறாதொரு நிலைய மீண்டும் உருவாகாத வகையில் ரென்னிஸ் சம்மேளனம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சர்வதேசப் போட்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் இந்த நெருக்கடியான அட்டவணை குறித்து சர்வதேச



ரென்னிஸ் சம்மேளன நிர்வாகிகளிடம் பேச உள்ளோம். இதில் சிறிதளவு மாற்றம் வேண்டும் இல்லையேல் முன்னணி வீரர்கள் தொடர்களைப் புறக்கணிப்பார்கள்.

சில வீரர்களிடம் இது குறித்துப் பேசியுள்ளேன். அவர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தவிர்க்க விரும்பும் பாக். கிரிக்கெட் சபை





(லாகூர்)

அக்தரின் புத்தக விடயத்தில் தலையிடாமல் விலகி இருக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

அக்தர், கிரிக்கெட்டில் ஓய்வு பெற்றுவிட்டார். எனவே இப்படி தான் நடந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் அவரை எதுவும் சொல்ல முடியாது. அவர் எழுதிய புத்தகத்தை இன்னும் நாங்கள் பார்க்கவில்லை. எனவே புத்தகத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்பது உண்மையில் எங்களுக்குத் தெரியாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைமை செயல் அலுவலர் சுபான் அகமது குறிப்பிட்டார்.

# அப்ரிடியின் ஓய்வு நகைச்சுவையானது



(லாகூர்)

அப்ரிடி, தனது முடிவில் நிலையான தன்மையுடன் இல்லாமல், மாறி மாறி முடிவு எடுத்து வருகிறார். இது நகைச்சுவையாக உள்ளது. நன்கு யோசித்து முடிவு எடுக்க வேண்டும். இவ்வாறு அக்ரம் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் என்பது ஒரு தனிப்பட்ட நபர் மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. ஒரு குழுவாகச் செயற்பட்டு நாட்டுக்குச் செய்யும் பணி. இதில் அணியின் பயிற்சியாளர் அல்லது சக வீரருடன் ஏற்படும் கருத்து வேறுபாட்டிற்காக எந்த ஒரு முடிவையும் எடுக்கக் கூடாது. நாம் நம்முடைய நாட்டிற்காகத் தான் உழைக்க வேண்டும் என்ற உணர்வு இருந்தால் போதும். மற்ற காரணங்கள் மறைந்து போய் விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


சிம்பாப்வே அணிக்கெதிரான போட்டித் தொடருடன் பயிற்சியாளர் பதவியிலிருந்து வாக்கார் யூனிஸ் விலகிக் கொண்டதை அடுத்து, மீண்டும் அணியில் இணைய விரும்புகின்றேன் என்றும், எனக்கு எந்தவொரு பிரச்சினையும் அணியில் தற்போது இல்லை எனவும் அப்ரிடி தெரிவித்திருந்தார். இது குறித்து கருத்துக் கேட்டபோது அக்ரம் மேற்கண்டவாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெயின் சம்பியன்

(கவுனாஸ்)

யூரோ கோப்பை கூடைப்பந்துத் தொடரில், ஸ்பெயின் அணி சம்பியன் பட்டம் வென்றது.

யூரோ கோப்பை கூடைப்பந்துத் தொடர் லிதுவேனியாவில் நடந்தது. இதில் நடப்பு சம்பியன் ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் மோதின. கடுமையான போட்டிக்குப் பின் ஸ்பெயின் அணி 98-85 என்ற கணக்கில் வெற்றி பெற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. இதையடுத்து வரும் 2012, லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் தகுதி பெற்றன.



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் மன்சூர் அலிகான் பட்டோடியின் இறுதி ஊர்வல நிகழ்வில் திரண்ட மக்கள் கூட்டத்தைக் காணலாம்.




பான் பசுபிக் ஓப்பன் மகளிர் ரென்னிஸ் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இன்று ஆரம்பமாகவுள்ளது. முன்னணி வீராங்கனைகள் சமந்தா ஸ்டோசர் (அவுஸ்ரேலியா), மரியா ஷரபோவா, வேரா ஸ்வோனரேவா (ரஷ்யா), பெட்ரா குவிட்டோவா (செக்.) ஆகியோர் களமிறங்குகின்றனர். இப்போட்டித் தொடரின் அறிமுக நிகழ்வில் சமந்தா ஸ்டோசர் உரையாற்றுவதைக் காணலாம்.

## கொழும்பில் திடீர் சுற்றிவளைப்பு 200க்கு மேற்பட்டோர் கைது

(கொழும்பு)

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆறு துணைக் காவல்துறை அத்தியட்சகர்கள் உள்ளிட்ட 215 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்தச் சுற்றி வளைப்புத் தேடுதலை நடத்தியுள்ளனர்

கொழும்பின் 19 காவல்துறை வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கு இடமான 21 முச்சக்கர வண்டிகளையும் காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.



ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க் பலஸ் ஹோட்டலில் வைத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தார்.

## 23 வர்த்தகர்களுக்கு அபராதம் விதிப்பு

(கொழும்பு)

காலாவதியான பல்வேறு பாவனைப் பொருட்களை விற்பனை செய்த ரங்கல பிரதேசத்தைச் சேர்ந்த 23 வர்த்தகர்களுக்கு தெல்தெனிய நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. கண்டிப் பிரதேச விலை கட்டுப்பாட்டு அதிகாரிகளும் பொதுச் சுகாதார அதிகாரிகளும் ரங்கலப் பிரதேசத்தில் நடத்திய சோதனைகளின் போது இவர் கள் இனங்காணப்பட்டனர்.

குறித்த வழக்கு மீதான விசாரணைகள் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.இதன்போது அவர்களுக்கு தெல்தெனிய நீதவான் தலா ஐயாயிரம் ரூபா வீதம் 1 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளார்.

## பிரதேச சபை முடக்கம்

(கொழும்பு)

ஹொரவப்பொத்தானை பிரதேச சபையின் சகல சொத்துக்களையும் முடக்கி வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.இந்த உத்தரவை அநுராதபுர மாவட்ட நீதிபதி லக்மாலி ஹேவாவசம் நேற்றுமுன்தினம் நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் 14 நாட்களுக்கு இந்த உத்தரவை அமுல்படுத்துமாறும் அவர் பணித்துள்ளார்.

வேலைத்திட்டம் ஒன்றிற்காக வழங்கப்பட்ட 100 இலட்சம் ரூபாய் பெறுமதியான இயந்திர உபகரணங்களை பிரதேச சபை மீள வழங்காமைக்கு எதிராக அநுராதபுர நகர வர்த்தகர் ஒருவரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# ஜனநாயகத்தை உறுதிசெய்வதற்கான சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது

## கூறுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

நாட்டு மக்களின் சுதந்திரங்களை வரையறுக்கும் வகையில் அரசாங்கத்தால் எழுப்பப்பட்டுள்ள மதிலை தகர்த்தெறிந்து ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணிகளுடன் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

ஜனநாயகத்தை உறுதிசெய்வதற்கான முதலாவது சந்தர்ப்பம் இப்பொழுது உருவாகியுள்ளது. கொழும்பிற்கு மாத்திரம் அல்லாது முழு நாட்டிற்கும் தகவலை அனுப்ப வேண்டும்

கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையம், கொம்பனித்தெரு பொலிஸ் நிலையம், தேசிய நூலகம்,ரேஸ் கோர்ஸ் ஆகியவற்றின் மதில்களை இடித்துவிடுவதற்காக கூட்டமைப்பினர் ஆணையைக் கோருவார்களாயின், இந்த நாட்டின் சுதந்திரத்தை சூழ அரசாங்கத்தினால் எழுப்பப்பட்டுள்ள, மக்களின் சுதந்திரங்களை வரையறைக்கும் மதிலைத் தகர்த்தெறிவதற்கான ஆணையை ஐக்கிய தேசியக் கட்சி கோரி நிற்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சுயலாப நோக்கங்களுக்காக அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது

### சஜித் பிரேமதாச




(கொழும்பு)

அரசியல் அதிகாரத்தை சுயலாப நோக்கங்களுக்காக பயன்படுத்தக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். நாட்டு மக்களையும், கட்சி ஆதரவாளர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சாதாரண பொதுமக்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் கட்சியின் வெற்றியை உறுதிசெய்ய முடியும். தொழிற்சங்கங்களின் ஊடாக கட்சியை வலுப்படுத்த முடியும்

அநேகமானவர்கள் அரசியல் அதிகாரத்தை தங்களது சுயலாப இலக்குகளைப் பூர்த்தி செய்து கொள்ள பயன்படுத்திக் கொள்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மின் உற்பத்தி நிலைய உரிமையை சீனாவிடமிருந்து இலங்கை பொறுப்பேற்றது



(கொழும்பு)

புத்தளம் லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் முதற்கட்ட உரிமையை சீனாவிடமிருந்து இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது.

சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்த மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற பொறுப்பேற்பு வைபவத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர், இலங்கைக்கான சீனத் தூதுவர், லக்விஜய மின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணிகளை முன்னெடுத்த நிறுவனத்தின் உபதலைவர் உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டனர்.

இலங்கையின் முதலாவது அனல் மின் நிலையமாக கருதப்படும் இந்த மின் நிலையத்தின் ஊடாக தேசிய மின் கட்டமைப்புக்கு 300 மெகாவோட் மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22 ஆம் திகதி மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

# இலங்கை - இந்திய கடற்படையின் கூட்டுப் போர் பயிற்சிகள் நிறைவு

(கொழும்பு)

இலங்கை இந்திய கடற்படையின் கூட்டுப் போர்ப் பயிற்சிகள் வெற்றிகரமாக நேற்றுமுன்தினம் நிறைவடைந்தன. இரு நாடுகளினதும் கடல் பாதுகாப்பு மற்றும் அந்நிய ஊடுருவல்களை தடுப்பதற்கு மேற்படி கூட்டுப் பயிற்சிகள் புதிய பாதுகாப்புப் பொறிமுறைகளுக்கு உதவும் என்று இரு நாட்டுப் பேச்சாளர்களும் தெரிவித்துள்ளனர்.

கூட்டுப் பயிற்சிகளை பார்வையிட பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோம திலக திசாநாயக்க, இந்தியக் கடற்படையின் கிழக்கு கடற்தொகுதியின் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் எச்.சி.எஸ். பிஸ்ட்மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா ஆகியோர் நேரடியாக திருகோணமலை கடற்பரப்பிற்கு சமூகமளித்திருந்தனர்.

இதன்போது தாக்குதல் படகுகளினதும் போர்க் கப்பல்களினதும் பாரிய போரபயிற்சிகள் இரு நாட்டு வீரர்களால் மேற கொள்ளப்பட்டதாகவும் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ் 47சிவாளத் என்ற போர்க் கப்பல் பல முன்னிலை அச்சுறுத்தலான பயிற்சிகளுக்கு தலைமை தாங்கியது.

இதேபோன்று இக்கப்பலுக்குச் சொந்தமான உலங்கு வானூர்திகள் சிறிய ரக விமானங்கள் என்பனவும் கூட்டுப் பயிற்சிகளில் ஈடு பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக இலங்கை கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவிக்கையில், கடந்த ஐந்து நாட்களாக கடும் போர்ப் பயிற்சிகளில் இந்திய மற்றும் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டனர். இதன்போது சிறந்த அனுபவங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## கஞ்சா கடத்திய மூவர் கைது


(கொழும்பு)

குருநாகல் கல்கமுவ பிரதேசத்தில் ஒன்றரைக் கிலோ கஞ்சா போதைப் பொருள் கடத்தினார்கள் என்ற சந்தேகத்தில் மூன்றுபேரை கல்கமுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கஞ்சாப் போதை பொருளை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலதிக விசாரணைகளை கல்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்படமாட்டார்கள்

## பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ



(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் கொழும்பிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு வாழ் முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்படுவார்கள் என மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் பொய்யானவை. முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட எவரும் கொழும்பிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள், மாறாக நகரத்தினரும் மக்களினதும் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கொழும்பில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன. பத்தாயிரம் கோடி ரூபா செலவில் சேரி மக்களுக்கு 35000 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதுடன், இதில் ஒரு வட்டுக்காக 30 இலட்சம் ரூபா செலவிடப்பட உள்ளது. சேரி வாழ்க்கை என்ற எண்ணக்கருவினை முற்று முழுதாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாலபே மருத்துவக் கல்லூரிக்கு எதிரான நடவடிக்கை குறித்து இன்று ஆராய்வு

(கொழும்பு)

மாலபேயில் அமைந்துள்ள மருத்துவக் கல்லூரிக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு இன்று கூடவுள்ளது என அச்சங்கம் நேற்றுத் தெரிவித்துள்ளது. 180 மருத்துவர்கள் இச்சங்கத்தின் செயற்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

சுகாதார அமைச்சு நியமித்துள்ள ஐந்து அங்கத்தவர் குழு அதன் அறிக்கையை இரண்டு மாதங்களில் வெளியிடும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள சங்கத்தின் பேச்சாள் டாக்டர் உபுல் குணசேகர கூறியுள்ளார்.

அதுவரையில் புதிய மாணவர்களை அங்கு சேர்க்க வேண்டாம் என ஆலோசனை கூறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கண்டியிலும் பத்தரமுல்லையிலும் வேறு 21 இடங்களிலும் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைக்கப்போவதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளதாக டாக்டர் உபுல் குணசேகர தெரிவித்துள்ளார்.

# எழுத்துத்துறை ஜம்பவான் கார்த்திகேசன்

**கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அவர்களின் 26 ஆவது நினைவு தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

அரசியலில் மட்டுமின்றி, பொதுவாக கம்யூனிஸ்ட்டுக்களுக்கு கை வந்த பத்திரிகைத் துறையிலும் கார்த்திகேசன் பல முத்திரைகளைப் பதித்துள்ளார். அவரது காலத்தில் இலத்திரனியல் உடகங்கள் பொதுவாக உலகிலும், குறிப்பாக இலங்கையிலும் வள்ர்ச்சி பெற்றிருக்கவில்லை. எனவே அச்சு ஊடகங்கள் தான் அவரது கை வண்ணம் கண்ட துறையாக இருந்தது.


அந்த வகையில், அவரது பத்திரிகை வாழ்வு அவர் இலங்கை பல்கலைக்கழக கல்லூரியில் (Ceylon university College) படிக்கும் காலத்திலேயே அரம்பமாகிவிட்டது. அங்கு அவர் Student News என்றொரு பத்திரிகையை தான் ஆசிரியராக இருந்து நடாத்தி வந்தார் ஒரு சந்தர்ப்பத்தில் அந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கும் படி தனது அறிக்கையொன்றை ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்ததாகவும், அதற்குக் காரணம் அந்தக் காலகட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜே.ஆர். ஒதுக்கப்பட்ட படியால் , அவரது செய்திகளை அக்கட்சித்தலைமைக்குச் சார்பான லேக்ஹவுஸ் நிறுவனம் பிரசுரிக்க மறுத்த படியால் என்றும் கார்த்திகேசன் கறுவார் அந்த Student News தான் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் Forward பத்திரிகையாகப் பரிணமித்தது.

பின்னர் அவர் முழுநேரமாக கட்சி உழியரான பின்னர், ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகைகளான 'தேசாபிமானி' Forward' என்பவற்றில் நிறைய அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதியிருக்கின்றார் பின்னர் கட்சியில் பிளவு ஏற்பட்டு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி உருவான பின்னர் அக்கட்சியின் பத்திரிகைகளான 'தொழிலாளி' Red Flag' என்பனவற்றில் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

அதன் பின்னர் 1972 மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி உருவான போது அக்கட்சியால் வெளியிடப்பட்ட இருவார இதழான 'போராளி' பத்திரிகையின் ஆசிரியக் குழு உறுப்பினர்களில் இருவராக இருந்து செயற்பட்டார் அவர் மரணிக்கும் வரை அதற்கு கட்டுரைகளும், செய்தி விமர்சனங்களும் எழுதி வந்தார்.

கார்த்திகேசன் அரசியலில் ஈடுபட ஆரம்பித்த காலத்தில், அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியிலில் ஈடுபடுவதற்கு தடை இருந்தபடியால், அவர் பல புனைபெயர்களிலேயே பத்திரிகைகளில் எழுதி வந்தார். கட்சியில் கூட அவர் 'மாணிக்கவாசகர்' என்ற பெயரிலேயே செயற்பட்டார். பிற்காலத்தில் அவர் பகிரங்கமாக கட்சி வேலைகளில் ஈடுபட்ட காலத்திலும், பல சந்தர்ப்பங்களில் புனை பெயர்களிலேயே எழுதியிருக்கிறார்.

The Nation, Tribune,Daily News ஆகிய ஆங்கில ஏடுகளில் ஆசிரியருக்கான கடிதம் என்ற பெயரில் ஏராளமான அரசியல் விமர்சனங்களை எழுதியிருக்கிறார்.



அக்கடிதங்களுக்கு அவர் பயன்படுத்திய பெயர்களில் ஒன்று கே.முருகேசன் என்பதாகும். எனது தகப்பனாரின் பெயர் முருகேசு என்றபடியால் தனது முதல் எழுத்தை முன்னே போட்டு தகப்பனாரின் பெயரை முழுமையாகப் போட்டு அவற்றில் எழுதியுள்ளார். பொருளாதார விடயங்களை எழுதும் போது Small Economist என்ற பெயரையும் பயன்படுத்தியுள்ளார்.

பத்திரிகைகளில் எழுதும் போது வாசிப்பவர்களைக் கவரும் வண்ணம் எழுதுவதில் கார்த்திகேசன் மிகவும் திறமைசாலி புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி Red Flag என்ற ஆங்கில வாரப் பத்திரிகையை ஆரம்பித்த போது, அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்ற தோழர் கார்த்திகேசன், அதற்காக பலத்த சிரமங்களுக்கு மத்தியிலும், ஒவ்வொரு வார இறுதியிலும் கொழும்பு சென்று அதன் வேலைகளைக் கவனித்து வந்தார். அப்பத்திரிகையில் அவர் வரைந்த அசிரிய தலையங்கங்களும், எழுதிய செய்தி விமர்சனங்களும் பலரது பாராட்டுக்களைக் குவித்தன சில.

965 இல் ஐ.தே.க தலைமையில் தமிழரசு - காங்கிரஸ் கட்சிகளும் மிக மோசமான சிங்கள இனவாதிகளான கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றோரும் ஒன்றாக அங்கம் வகித்த ஏழு கட்சிக் கூட்டாட்சி பதவி ஏற்றது. அவ்வரசாங்கம் பதவியேற்றதும் முதல் செய்த வேலை அதுவரை காலமும் வறிய மக்களுக்கு இலவசமாக வழங்கி வந்த அரிசி மானியத்தை வெட்டியதும், வடபகுதி விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் வண்ணம், உணவு இறக்குமதிக்கு இருந்த கட்டுப்பாட்டை நீக்கியதும், ரூபாயின் பெறுமதியை இருபது வீதத்தால் குறைத்ததும் தான்.

அதனால் நாட்டு மக்கள் பெரும் வறுமைக்குள் தள்ளப்பட்டனர். ஐ.தே.க அரசின் இந்த மக்கள் விரோத நடவடிக்கையைக் கண்டிக்கும் விதத்தில், அக்கட்சியின் சின்னமான யானையை முன்னிறுத்தி ஒரு தலைப்புச் செய்தியை 'தீப்பொறி' பிரசுரித்தது. கார்த்திகேசனின் வாயிலிருந்து உதித்த அந்தத் தலைப்பு இது. 'ஆட்சிக்கு வந்தது ஆனை! - அடுப்புக்குள் புகுந்தது பூனை'.

கார்த்திகேசன் தனது எழுத்துத் துறையைப் பத்திரிகைகளுடன் மட்டும் நிறுத்திக் கொண்டவரல்ல. பல பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்பனவற்றின் ஆண்டு மலர்களிலும், பல கலை இலக்கிய விழா மலர்களிலும் கூட அவரது ஏராளமான கட்டுரைகள் வந்துள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சியின் பல அறிக்கைகள் அவரது கைவண்ணத்தில் உருவானவையே. இவை தவிர பொதுமக்களின் தேவைகளுக்காக அவர்தன் நாளில் பல்லாயிரக்கணக்கான கடிதங்களை எழுதிக் கொடுத்திருப்பார். அவர் மரணிக்கும் சமயத்தில் கூட, தொழிலாளி ஒருவரின் பிரச்சினை சம்பந்தமாக ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருக்கையிலேயே அவர் உயிர் பிரிந்தது.

தோழர் கார்த்திகேசன் பிரசித்தி பெற்ற ஆங்கிலக் கவிதையொன்றையும் எழுதியுள்ளார்.

உலகில் முதன்முதலாக விண்வெளிப் பயணம் மேற்கொண்ட சோவியத் விண்வெளி வீரர் யூரிகாகரின் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தபோது, யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரிக்கும் வருகை தந்தார்.

அவரது வருகை சம்பந்தமாக வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் தான் காகரின் சாதனை சம்பந்தமாக கார்த்திசேன் ஒரு அருமையான கவிதையை எழுதியிருக்கிறார்.

1961 இல் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் மேற்கொண்ட சத்தியாக்கிரகம், ஒரு பெரும் வெகுஜனப் போராட்டமாக நடந்தது. இந்தப் போராட்டம் பிழையான நோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதால், அது வெற்றி பெறவில்லை.

இந்தப் போராட்டத்தை நேரில் அவதானித்து, உண்மை நிலையைக் கண்டறிவதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அதன் பெருந்தலைவர்களில் ஒருவரான தோழர் பி.இராமமூர்த்தி அவர்களை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தது.

அவர் யாழ்ப்பாணம் வந்து சென்ற பின்னர், தமிழரசுக் கட்சி நடாத்தி வந்த சத்தியாக்கிரகத்தின் கபட நோக்கங்களை விளக்கி, இலங்கைத் தமிழர் பிரச்சினை என்ன? என்ற தலைப்பில் பெறுமதிமிக்க பிரசுரம் ஒன்றை சென்னையில் வெளியிட்டார். அதற்கான மூலக் குறிப்புக்கள் தோழர் கார்த்திகேசனால் தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் தோழர் கார்த்திகேசனுக்கு செய்யக்கூடிய நினைவஞ்சலிகளில் ஒன்று, அவர் தனது காலத்தில் எழுதிய அனைத்தையும் தேடியெடுத்து நூலுருவாக்குவது தான். அவ்வாறு செய்தோமானால், அது 30 வருட கோர யுத்தத்தால், திக்கற்றுப் போய் நிற்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் ஒரு பொக்கிசமாக, முதுசமாக இருக்கும்.

**-சண்முக சுப்பிரமணியம்**

# கட்சியைப் பிளவு படுத்தும் முயற்சிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது

(கொழும்பு)

கட்சியைப் பிளவுபடுத்த சிலர் முயற்சி எடுத்து வரும் போதிலும் அதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.ஜே.வி.பி கட்சி விதி முறைகளுக்குப் புறம்பாக செயற்படும் சொற்ப அளவிலான நபர்கள் கட்சிக்குள் முறுகலை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான பிரச்சினைகள் குறித்து உறுப்பினர்களுக்கு ஏற்கனவே தெளிவு படுத்தியிருப்பதனால் குழப்ப நிலைமைகள் ஏற்பட வாய்ப்பில்லை.

கிளர்ச்சி அணியுடன் எவ்விதமான நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள ஜே.வி.பி தயாராக இல்லை கட்சியில் தற்போது அங்கம் வகிக்கும் உறுப்பினர் எவருக்கும் பிரச்சினைகள் இருக்குமானால், அது குறித்து தலைமைத்துவ மட்டத்தில் உள்ளவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும், எனினும் கட்சியின் யாப்பை மீறியுள்ளதால், கட்சியில் இருந்து விலக்குவதைத், தவிர எந்த நபருடனும், எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட மாட்டாது

குமார் என்ற பெயரில் கட்சியில் எந்தத் தலைவரும், இல்லை அப்படியான எவருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட மாட்டாது. கட்சி எதிர்நோக்கியிருக்கும் உண்மையான நிலைமை தொடர்பாக



கட்சியின் கீழ் மட்டத் தொண்டர்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. என்றார்.

## கழிவுநீர் முகாமைத்துவம் காத்தான்குடியில் ஆரம்பம்


(மட்டக்களப்பு)

காத்தான்குடி நகர சபை பிரிவில் ஆறு கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட கழிவு நீர் அகற்றல் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ சுகாதார திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டமான யு.என்.டி.பி.யினால் கொக்கா கோலா நிறுவனத்தின் நிதியுதவியுடன் காத்தான்குடி இரண்டாம் குறிச்சி ஆற்றங்கரையை அண்டியுள்ள பகுதியில் இக்கழிவு நீர் அகற்றல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இப்பிரதேசத்தில் கடற்கரையை அண்டிய பகுதியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவும் இதன்போது திறந்து வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் இப்பிரதேசத்திலுள்ள 350 குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

# கொழும்பின் பல்லினத் தன்மையே மிகப் பெரும் சக்தியாகும்



## - மிலிந்த மொறகொட

(கொழும்பு)

கொழும்பு நகரில் காணப்படும் பல்லினத் தன்மையே நகரின் சக்தியாகும். அனைவரையும் சமமாகவே பார்க்கின்றேன். அதனால் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லை. அனைவரும் எமது மக்கள் என்றே கருதுகின்றேன். அதேவேளை, பல்லினமே எமது சக்தி என்ற உண்மையினை உணர எமது அரசியல் தலைமைகள் தவறிவிட்டார்கள்" என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு அடுத்தபடியாக மிகவும் முக்கியத்துவம் பெற்ற அமைப்பாக கொழும்பு மாநகரசபை உள்ளது. இந்நிலையில், கொழும்பு மாநகர மேயர் என்பது சிறிய பதவியல்ல. அந்தவகையில் அந்தப் பதவிக்கு போட்டியிடும் தீர்மானத்துக்கு என்னை கொண்டுவந்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான். கொழும்பு நகரசபையை 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவகையில் கொண்டுவர வேண்டும் என்று ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார்.

30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக கொழும்பு மாநகரசபைக்கு பாரியளவில் எதுவும் செய்ய முடியாது போனது. உண்மையில், யுத்தச் சூழ்நிலை காரணமாக இந்த நகரம் மூடப்பட்டிருந்தது என்றே கூற வேண்டும். காரணம் யுததம் கொழும்பு நகரை மிகவும் பாதிப்படையச் செய்தது. அதனால் 21ஆம் நூற்றாண்டின் சிறந்த் நகராக மாற்ற வேண்டும். அதற்கு சிறந்தவொரு தலைவர் தேவை. அதற்கு நீங்களே பொருத்தமானவர் என்று ஜனாதிபதி கூறினார். இந்நிலையில், அவருடனும் ஏனைய கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இந்த மேயர் பதவிக்கு போட்டியிடுவதான தீர்மானத்துக்கு வந்தேன் என்றார்.

# வாக்காளர் அட்டை இன்றும் விநியோகம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல்களுக்காக இன்றும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என தோதல்கள் செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித் தார். வாக்காளர் அட்டை விநியோகம் செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வாக்காளர் அட்டை கிடைக்காவிட்டாலும் தகுதியான வாக்காளர்கள் தபாலதிபரிடம் தமது அடையாளத்தை நிரூபித்து வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள் ளலாம் என பிரதி தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ. பி.சுமனசிறி தெரிவித்தார்.

# அமைச்சர்கள் அநீதி இழைத்தால் தகுந்த பாடம் புகட்டுவோம்

## கூறுகிறார் சரத்பொன்சேகா



(கொழும்பு)

அமைச்சர்கள் அநீதி இழைத்தால் தகுந்தபாடம் புகட்டுவோம் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தோள் பட்டையில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்குச் சென்றிருந்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

களனியில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் அமைச்சர் மத பேதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டு வருகின்றார்

கொழும்பில் போதைப் பொருள் விற்பனை செய்யும் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். களனியைச் சேர்ந்த அமைச்சர் மக்களின் கை, கால்களை உடைப்பதாக எச்சரிக்கின்றார்.

இவ்வாறான நபர்கள் பொது மக்களுக்கு தொடர்ந்தும் அநீதி இழைத்தால் வாழ்க்கையில் மறக்க முடியாத பாடங்களை நாம் கற்பிப்போம் என்றார்.

# உரிய காலத்தில் பாடசாலைச் சீருடைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## - பிரதிக் கல்வியமைச்சர் விஜிதமுனி சொய்சா


(கொழும்பு)

எதிர்வரும் வருடங்களில் உரிய காலத்திற்குள் பாடசாலைச் சீருடைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். சீருடைத் துணிகளை வழங்குவதை தாமதப்படுத்திய உள்ளூர் விநியோகஸ்தர்களுடன் இனிமேல் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படாது என பிரதிக் கல்வி அமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவித்தார்.நாடாளுமன்றத்தில் வாய் மூல விடைக்காக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாடு பூராவும் உள்ள 30 32 722 மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்கப்படுகிறது.

2011ஆம் ஆண்டில் 2 மாவட்டங்கள் தவிர சகல மாவட்டங்களுக்கும் சீருடை விநியோகிக்கப்பட்டது. எஞ்சிய இரு மாவட்டங்களுக்கும் 30ஆம் திகதிக்கு முன் சீருடை வழங்குவோம். உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக சீருடை விநியோகிக்கும் பொறுப்பு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினூடாக உள்நாட்டு விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சில விநியோகஸ்தர்களின் தாமதம் காரணமாக சீருடை விநியோகம் தாமதமானது. அடுத்த வருடங்களில் முன்கூட்டியே சீருடை வழங்கப்படும் என்றார்.





# கொழும்பில் கைத்தொழில் கண்காட்சி

மேல் மாகாண விவசாயம் கமநல அபிவிருத்தி சிறு நீர்ப்பாசனக் கைத்தொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சரின் ஆதரவுடன் தேசிய அருங்கலைகள் பேரவையும் ஒன்றிணைந்து மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்தினால் ஹஸ்த 2011 கண்காட்சி கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அமைசசர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் சிறப்புற. முதல்நாள் நிகழ்வு ஆரம்பமாகியது. கண்காட்சியில் துணி, மரம் தோல்,மற்றும் உலோகம் உள்ளிட்டவற்றால் ஆக்கப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேல் மாகாண விவசாயம் கமநல அபிவிருத்தி சிறுநீர்ப்பாசனம் கைத்தொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சர் உதய கம்பன்பில மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேல் மாகாண உறுப்பினர் தயாகாந்த பெரேரா மேல் மாகாண ஆளுநர் அல்ஹாச் அலவி மௌலான, அமைச்சர் - டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம் தேசிய அருங்கலைகள் பேரவைத் தலைவர் புத்தி கீர்த்திசேன அதன் பணிப்பாளர் பூலோகசிங்கம் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டதுடன் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த உற்பத்திப் பொருட்களையும் பார்வையிட்டார்.

நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கைத்தொழில் உற்பத்திகளை உற்பத்தி செய்வதன் ஊடாக சிறந்த உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தை வாய்ப்புக்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஹஸ்த 2011 கண்காட்சியை மேல்மாகாணத்தில் ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை கைத்தொழில் உற்பத்திகள் நவீன தொழில் நுட்பத்துடன் கூடியதாக அமையப்பெறல் வேண்டும். அவ்வாறான சிறந்த உற்பத்திகள் மூலமாகவே தனிநபர் மட்டுமல்லாது சமூக பொருளாதாரத்தையும் எட்டமுடியும் என்பதுடன் அதற்கேற்ற வகையில் உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தை வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் கைத்தொழில்களை விருத்தி செய்வதும் அதனூடாக தனிநபர் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை சிறப்பாக முன்னெடுக்க வேண்டுமென்பதே எமது அமைச்சின் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

# புல்லாங்குழல் குகை



சீனாவின் மிகப் பிரசித்தி பெற்ற குகைகளில் புல்லாங்குழல் குகையும் ஒன்று. 180 மில்லியன் வருடங்கள் பழைமை வாய்ந்தது. குகை பல நிறங்களில் ஆனது. சுண்ணாம்புக் கற்களால் ஆன பல தூண்கள் இக் குகையில் காணப்படுகின்றன. இங்கு புல்லாங் குழல் ஒசை ஒலிப்பதால் புல்லாங்குழல் குகை என இது அழைக்கப்படுகிறது.

# உலகின் உயரமான பெண் நாய்

மிக உயரமாக வளரக் கூடிய நாய் இனம் 'கிரேட் டேன்'. ஜேர்மன் மாஸ்டி்.ப் என்று அழைக்கப்படுகிறது. இந்த இனத்தை சேர்ந்த நாய் ஒன்றை அமெரிக்காவின் இலினாய்ஸ் மாநிலம் அடிசன் நகரை சேர்ந்த ஆன் சப்லி என்பவர் வளர்த்து வருகிறார். நோவா (Nova) என்று இதற்கு பெயர் வைத்திருக்கிறார்.





உலகிலேயே மிக உயரமான பெண் நாய் என்று இது சமீபத்தில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறது. ஏற்கனவே இந்த பெயரை பெற்றிருந்த நாய் இறந்துவிட்டதால், இந்தப் பெருமை நோவாவுக்கு கிடைத்துள்ளது.


மொத்தம் 5 அடி 11 அங்குலம் நீளம் இதன் அப்பா, அம்மாகூட இந்தளவு நீளம் இல்லையாம். "வாரத்துக்கு 13 கிலோ உணவு சாப்பிடுகிறது வீட்டில் ஏதாவது விசேஷம் என்றால் தர்பூசணி வாங்கிக் கொடுத்தால் ஆசையுடன் சாப்பிடும்.

69 கிலோ எடை இருக்கிறது. குட்டியில் இருந்தது போலவே இப்போதும் கட்டிலில் என்கூடத்தான் படுத்துத் தூங்குகிறது" என்கிறார் ஆன் சப்லி.

# சுறா மீனிலிருந்து மருந்து

மனித உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களை குணப்படுத்த விஞ்ஞானிகள் மருந்துகளை கண்டுபிடித்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது சுறா மீனின் கல்லீரலில் இருந்து பலவித மருந்துகள் தயாரிக்க முடியும் என கண்டறிந்துள்ளனர். ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மைக்கேல் 'ஸ்லாப் என்பவர் தலைமையிலான குழுவினர் ஒரு ஆய்வு மேற்கொண்டனர். பொதுவாக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் நுண்ணுயிர் மற்றும் "ஸ்குயாலமின்" என்ற இரசாயன பொருட்கள் மனித உடலில் ஏற்படும் நோயை தடுக்க உதவுகின்றன.

இவற்றின் உதவியுடன் டெங்கு காய்ச்சல், மஞ்சள் காமாலை நோய்கள், மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு புதிய வகையான மருந்துகள் தயாரிக்க முடியும் என ஆலோசித்தனர். இந்த நிலையில் சுறா மீனின் கல்ல்ரலில் நோய் எதிர்ப்பு சக்தியுடைய ஸ்குயா லமின் இரசாயனப் பொருள் இருப்பதைப் பரிசோதனையின் மூலம் அறிந்தனர்.



அதைத் தொடர்ந்து சுறாவின் கல்லீரலில் இருந்து மஞ்சள் காமாலை, டெங்கு காய்ச்சல் போன்றவற்றை குணப்படுத்த மருந்து தயாரிக்க முடியும் என தெரிவித்துள்ளனர். இவை தவிர சுறா மீனின் வகையைச் சேர்ந்த மற்ற கடல்வாழ் உயிரினத்தில் இருந்தும் மருந்துகள் தயாரிக்கலாம் என்றும் கூறியுள்ளனர்.

# அழகிய நாய்


ஒரு பொமேரியன் நாய்க்கு உலகில் ஏராளமானோரால் விரும்பப்படும் அழகிய நாயாக மகுடம் சூட்டப்பட்டுள்ளது. குறித்த நாய்க்கு சமூக வலைத்தளங்கள் மூலம் உலகெங்கிலும் 2 மில்லியனுக்கும் மேற்பட்ட ரசிகர்கள் உள்ளார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்... ஐந்து வயதான குறித்த நாய்க்கு அதன் அமெரிக்க எஜமானரால் பேஸ்புக் பக்கம் ஒன்று 2009 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்றும் இதன் பேஸ்புக் பக்கத்தில் நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இணைந்து வருகிறார்களாம். அந்த நாயின் அமெரிக்க உரிமையாளரான J. H. Lee கருத்துத் தெரிவிக்கையில், எனது நண்பர்களுக்கு Boo என்ற எனது நாயின் புகைப்படங்கள் ரொம்பவே பிடிக்கும்.. சும்மா பகிடிக்காக தான் நாய்க்கு பேஸ்புக் பக்கம் உருவாக்கினேன்... ஆனால் தற்போது மில்லியன் கணக்கானோர் இதில் இணைந்துள்ளனர். ஆனால் இன்று "world's cutest dog" உலகின் அழகிய நாய் ஆக மாறியுள்ளமை மன நிறைவைத் தருகின்றது.



# சாரதி இன்றி நகரும் கார்கள்

வாகன சாரதி இல்லாமல் வாகனம் ஓட்டமுடியுமென்று பிறீ பல்கலைக்கழகம் நிரூபித்துள்ளது. இதனை பேச்சு, பார்வை, இயக்கம் மூலம் கட்டுப்படுத்தி வாகனம் ஓட்ட முடியும். எதிர்காலத்தில் வீதிகள் முழுவதும் கணினி மயப்படுத்தப்பட்டுவிடும். அப்போது இதன் உதவி சேவை நமக்குத் தேவைப்படும் என்கின்றனர். பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் ஜேர்மன் தலைநகர் சுற்றி இந்த வாகனத்தைப் பரிசோதனை செய்தனர். இதன் சுயமான போக்குவரத்தினை ஒரு கணினி, மின்னணு மற்றும் பெட்டி, முன்னால் ஒரு கமெரா, கூரை முன் மற்றும் பின்பக்க பம்ப்பர்களைச் சுற்றி லேசர் ஸ்கேனர்கள், ஒரு துல்லியமான செயற்கைக்கோள் ஊடுருவல் முறையானது உள்ளிட்ட சாதனங்கள் ஒரு சிக்கலான கோர்வைகள் ஆள்கின்றன.

வாகனத்தைச் சுற்றி 70 மீற்றருக்கு வீதியில் பாதசாரிகள், கட்டடங்கள், மரங்கள், கார்கள் கவனித்து இவ்வாகனம் செல்லும். அத்துடன் போக்குவரத்து விளக்குகள் மேலே சிவப்பு அல்லது பச்சை மற்றும் அதற்கேற்ப போக்குவரத்து விதிகளைப் பேணியும் செல்லும். விஞ்ஞானிகள் அயராத 4 ஆண்டுகளின் பயனாக இச்சிறப்பு தொழில்நுட்பத்தினை கண்டுபிடிக்க $ 551,800 டொலர்கள் செலவாகியது. இவ்வகையான கார்கள் எதிர்காலத்தில் எமது சந்தைக்கு வந்தால் வீதி விபத்துக்களைக் குறைக்க ஏதுவாக அமையும். இன்னொரு காலம். மனிதன் வாழத்தேவையில்லை. ஒரு காட்சிப் பொருளாக மட்டும் இருந்தால் போதும். மற்ற எல்லா விடயங்களை யும் மெசின்களே பார்த்துக் கொள்ளும். அக்காலமும் வெகு தொலைவில் இல்லை.




# சாப்பாட்டு ராமன் சாவு

உக்ரைன் நாட்டை சேர்ந்தவர் இவான்மெண்டல் (77). தென்'போரீயா மாகாணத்தில் உள்ள தொக்மாக் நகரில் சாப்பாட்டு ராமன் போட்டி நடந்தது. அதில் இவான் மெண்டல் கலந்து கொண்டார். இவர; 1/2 நிமிடத்தில் 10 "பிளேட்" உணவை சாப்பாட்டு வெற்றி பெற்றார். போட்டியில் வெற்றி பெற்ற அவருக்கு பரிசு பொருளுடன் கணிசமான தொகையும் வழங்கப்பட்டது. இதை தொடர்ந்து, சாப்பிட்டது செரிக்க ஒரு லிட்டர் புளிப்பான கிரீமை சாப்பிட்டார். இதனால் அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. எனவே, அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் பரிதாபமாக இறந்தார்.



# உங்களது கணினியை பாதுகாப்பதற்கு

கணினி பயன்பாட்டாளர்கள் அனைவருக்கும் தங்களது தகவல்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற கவலை இருக்கும். இதற்கு அனைவரும் உபயோகப்படுத்துவது ஆண்டிவைரஸ் மென்பொருளைத் தான். சில நேரங்களில் கணினியிலுள்ள ஆண்டிவைரஸ் மென்பொருளையும் மீறி வைரஸ் தாக்குதல் நடைபெறுகிறது.

இது போன்ற சந்தர்ப்பங்களில் பல பிரபலமான ஆண்டிவைரஸ் மென்பொருட்களை கணினியில் நிறுவி ஸ்கான் செய்யுமாறு பரிந்துரைக்கிறார்கள். எனினும் ஒரேநேரத்தில் இரு ஆண்டிவைரஸ் மென்பொருட்களை நிறுவ முடியாது. பிரபலமான சில ஆண்டிவைரஸ் மென்பொருட்களின் ஒன்லைன் ஸ்கானிங்க் இணைப்புக்களை தொடர்ச்சியாக இங்கே பார்க்கலாம்.


bitdefender எனும் பிரபலமான ஆண்டிவைரஸ் மென்பொருளின் இலவச ஒன்லைன் ஸ்கானிங்க் இணைப்பு இதுவாகும். இங்கே சென்று Start Scanner என்பதை கிளிக் செய்தால் திறக்கும் விண்டோவில் நீங்கள் பயன்படுத்தும் உலாவி பயர்பொக்சாக இருந்தால் அதற்குரிய ஆட் ஒன் ஐ நிறுவ வேண்டும்

தரவிறக்க சுட்டி:- http://www.bitdefender.com/scanner/online/free.html

கணினி முலை

# வளரும் நாடுகளின் உட்கட்டமைப்பை வளர்ந்த நாடுகள் மேம்படுத்த வேண்டும்

## இந்திய நிதியமைச்சர் கோரிக்கை



(புதுடில்லி)

உலக நாடுகள் தங்களது உபரி நிதிகளை வளரும் நாடுகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் முதலீடு செய்ய வேண்டும் என்று இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கோரிக்கை விடுத்துள்ளார்.

வளர்ச்சி நடவடிக்கைகள் இன்னும் பரந்த அளவில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அவர் வளரும் நாடுகளில் வளர்ச்சி நடவடிக்கைகளை வலுப்படுத்துவது அதில் முதன்மையானது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜி-20 எனப்படும் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் குழுவின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் ஆளுநர்கள கலந்துகொண்ட இரவு உணவுக் கூட்டத்தில் பேசும்போது பிரணாப் இதைத் தெரிவித்தார். வோஷிங்டன் நகரில் கடந்த வியாழக்கிழமை இரவு இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

பிரணாப் மேலும் கூறுகையில், உலகிலுள்ள பெரும்பாலான வளரும் நாடுகள் மிக வேகமாக வளரும் திறனை அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் மோசமான உள்கட்டமைப்பு வசதிகளால் ஒரு அளவுக்கு மேல் அவற்றால் வளர்ச்சியடைய முடியவில்லை.

இதுபோன்ற நாடுகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதியுதவி அளிபபது சர்வதேச அளவில் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் நாடுகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் அவற்றைக் கையாளுவதற்கான கொளகைகள் உள்ளிடடவை ஜி-20 நாடுகளின் விதிமுறைகளில் இடம்பெற வேணடும் என்றார்.

# நடிகையின் வாழ்க்கை வரலாறு படமாக வெளிவருகிறது

(சென்னை)

ஆபாசமும் விரசமும் அற்ற முறையில் நடிகைகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் ஒரு நடிகையின் வாக்குமூலம் என்ற படம் தயாரிக்கப்படுகிறது. சோனியா அகர்வால், அஞ்சலி என்ற நடிகையின் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இப்படத்துக்கு கதை, திரைக் கதை, வசனம் எழுதி ராஜ் கிருஷ்ணா இயக்குகிறார். நடிப்பதற்கு முன்பு, நடிகையான பின்பு நிஜ வாழ்க்கையில் சந்திக்கும் நல்லது, கெட்டதுகளை ஒரு நடிகையின் வாக்குமூலமாக இப்படத்தில் பதிவு செய்கிறோம். அவர்களின் வேதனையான இன்னொரு பக்கம் இதில் காட்சிப் படுத்தப்படுகிறது. ஆபாசமோ, விரசமோ இல்லாத நல்ல படமாக இருக்கும் என்றார் இயக்குநர்.

# மணிப்பூரில் நில அதிர்வு

(சென்னை)

மேற்கு வங்க மாநிலமான மணிப்பூர் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் 4.5 ரிக்டர் அளவுக்கு நில அதிர்வு காணப்பட்டது. சிக்கிம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் கடந்த சில நாட்களுக்கு முன் பூகம்பம் ஏற்பட்டது.

நூற்றுக்கும் அதிகமானவர்கள் இந்தப் பூகம்பத்தில் பலியானார்கள். இந்நிலையில் மணிப்பூர் மாநிலத்தின் இம்பால் மாவட்டத்தில் 4.5 ரிக்டர் அளவுக்கு நில அதிர்வு காணப்பட்டது. எனினும் இந்த நில அதிர்வால் எந்த பாதிப்பும் ஏற்பட்டதாக இதுவரை செய்திகள் வெளியிடப்படவில்லை.

# சோனியாவைச் சந்தித்தார் கருணாநிதியின் தூதர்

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் சோனியாவை, தி.மு.க., தலைவர் கருணாநிதியின் தூதர் டி.ஆர்.பாலு சந்தித்துப் பேசினார். மரியாதை நிமித்தமான, வழக்கமான சந்திப்புதான் என்று கூறப்பட்டாலும், கனிமொழிக்கு பிணை பெறும் நோக்கில் தீவிரமாக தி.மு.க., இறங்கியுள்ள நிலையில், சோனியாவை, கருணாநிதியின் தூதர் சந்தித்து இருப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாகவுள்ளது.

# ஜம்மு காஷ்மீரில் ராகுல் சுற்றுப்பயணம்

(ஜம்மு)

வரும் 26 ஆம் திகதி இரண்டு நாள் சுற்றுப்பயணமாக காங்., பொதுச் செயலாளர் ஜம்முகாஷ்மீர் மாநிலம் செல்ல உள்ளார். இது குறித்து மாநில இளைஞர் காங்கிரஸ் தலைவர் சையீப் உத்-தீன் சோஸ் தெரிவித்திருப்பதாவது, மாநிலம் முழுவதும் உள்ள இளைஞர் காங்கிரஸ் தொண்டர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ராகுல் சந்திக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

நாளை மாநிலத்திற்கு வருகை தரும் ராகுல் சிறிநகர்ப் பகுதியில்முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். இரண்டாவது நாளாக ஜம்மு பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தல் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்


(புதுடில்லி)

ஒக்டோபர் மாதம் 17. 19 ஆம் திகதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன இத் தேர்தல் தொடர்பாக தி.மு.க தலைவர் கருணா நிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

பொதுவாக அரசின் சார்பில் தேர்தல் நாளுக்கான அறிக்கை வெளிவந்து அதற்கு ஒரு சில நாட்களுக்குப் பிறகு தான் வேட்புமனு தாக்கலுக்கான நாள் தொடங்கும்.

ஆனால் இந்த முறை தேர்தல் அறிக்கை வெளிவந்த அடுத்த நாளே வேட்புமனு தாக்கல் செய்வது தொடங்கி விட்டது. அது மாத்திரமல்ல, இந்தத் தேர்தலில் எந்தெந்த தொகுதிகள் பொதுத் தொகுதிகள், எந்தெந்தத் தொகுதிகள் பெண்களுக்கான தொகுதிகள், எந்தெந்த தொகுதிகள் தனித் தொகுதிகள் என்ற அடிப்படை விவரங்கள் எதுவும் எதிர்க்கட்சிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றார்.

இதுவரை பொதுத் தொகுதியாக இருந்து பலரும் அங்கே போட்டியிட எதிர்பார்த்துக் கொணடிருந்த நேரத்தில் திடீரென்று அந்தத் தொகுதியை தனித் தொகுதி என்று அறிவித்த காரணத்தால் - அங்கே போட்டியிடுவதற்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசியல் கட்சிகளுக்கெல்லாம் நெருக்கடி. அது போலவே திடீரென்று பெண்கள் தொகுதியாக மாற்றப்பட்ட இடங்களில் இரண்டொரு நாட்களில் பெண் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசரமும் ஏற்பட்டது.



மாநில தேர்தல் ஆணையரிடம் இந்த கேள்வியை செய்தியாளர்கள் எழுப்பிய நேரத்தில் மாநிலத் தேர்தல் ஆணையர் வேட்புமனு வாங்குகின்ற இடத்திலே அது யாருக்கான தொகுதி என்று ஒட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

# ஈழத்தமிழர்.....

(14ம் பக்கத் தொடர்ச்சி....)

எண்பதுகளில் - தமிழர்களின் போராட்டம் தீவிரமடைந்த நிலையில் - இருந்ததைப்போல இன்றைய நிலைமைகள் இல்லை.

கடந்த காலத்தில் நாம் தொடர்ச்சியாக உணர்ச்சியின் வேகத்திலும் அதன் போக்கிலுமே செயற்பட்டிருக்கிறோம். அரசியல் நிலைவரம் என்பது பல முனைகளில், பல போக்குகளில், பலவிதமான சுழிப்புகளுடன் மிகவேகமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு நடவடிக்கை என்பதை நாம் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. இவற்றை மதிநுட்பத்துடன் விளங்கிக் கொண்டு, அதற்கமைவான பொறிமுறைகளை வகுத்துக் கொள்வதே சிறந்த அரசியற் தலைமைகளின் பணியாக இருக்கும்.

இதைத் தவிர்த்து, அவ்வப்போது எழுகின்ற மன எழுச்சிகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் ஏற்றவாறு நாம் செயற்படுவோமாக இருந்தால், நிச்சயமாகத் தோல்வியை நிரந்தரமாக்கிக் கொள்வதைத் தவிர, வேறு வழியிருக்காது.


ஆனால், தமிழர்களின் அரசியலோ குளம் வற்றும் வரை காத்திருக்கும் கொக்கின் கதையைப் போலவே இருக்கிறது.

கசப்பாக இருந்தாலும் இதுதான் உண்மை.

இதைக்குறித்து நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

- *நன்றி: பொங்குதமிழ்*

# எம்மிடம் கடவுள் கேட்பது...




கடவுள் தாம் தேர்ந்துகொண்ட மக்களோடு நட்பின் அடிப்படையில் அமைந்த ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அந்த அன்பு உறவுக்கு உரிய பதில் மொழியைத் தர அம்மக்களில் பலர் தவறிவிட்டார்கள். மாறாக, யூத சமூகத்திற்குப் புறம்பானவர்கள் எனக் கருதப்பட்ட பிற இனத்தார் முதல் கட்டத்தில் கடவுளின் விருப பப்படி நடக்க முன்வராமல் இருந்தாலும், நற்செய்தியைப் பெற்றுக் கொண்ட பிறகு மனமுவந்து கடவுளின் பணியில் ஈடுபட்டார்கள். உண்மையிலேயே கடவுளின் தோட்டத்தில் பணிசெய்யச் சென்றார்கள்.

இயேசு நம் உதவியை நாடுகிறார். கடவுளின் பணி மனிதரின் துணையோடுதான் நிகழமுடியுமே தவிர வேறு வழியால் நடக்காது. ஆகவேதான் கடவுளின் திட்டத்தில் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு சிறப்பிடம் உண்டு. நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட அன்போடு கைவிரித்து ஏற்பவர் நம் கடவுள். இத்தகைய ஆழ்ந்த நட்பினை நம்மேல் பொழிகின்ற கடவுள் நம்மிடம் கேட்பதெல்லாம் நாம் அவருடைய தோட்டத்தில் வேலை செய்ய வேண்டும் என்பதே. இத்தோட்டம் திருச்சபையைக் குறிக்கும் பரந்து விரிந்த பாருலகில் வாழ்கின்ற மக்களைக் குறிக்கும். யாராக இருந்தாலும் மனிதர் அனைவரும் கடவுளின் படைப்புக்களே என்பதால் நாம் உலக மக்கள் அனைவருக்கும் பணியாளராகத் துலங்குவது தேவை. தோட்டத்தில் நன்கு வேலை செய்தால் அதன் பலன் நம் சிந்தனையெல்லாம் கடந்தது. கடவுளோடு நாம் என்றென்றும் இணைந்திருப்போம். இதுவே கடவுள் நமக்கு அளிக்கின்ற உயரிய மாண்பு.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர்: ம.ரிஷாலினி
முகவரி: நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

உலகச் செய்திகள்

# இரட்டைக்கோபுரத் தகர்ப்புக்கு வேறு காரணங்களும் இருக்கலாம்

## ஈரான் ஜனாதிபதி அஹமட் நிஜாட்



அமெரிக்க இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்கு இரு விமானங்கள் மட்டும் மோதி தகர்க்கப்பட்டமை தொடர்பில் தனக்கு சந்தேகம் நிலவுவதாக ஈரானிய ஜனாதிபதி அஹமட் நிஜாட் தெரிவித்துள்ளார்.தான் ஒரு பொறியியலாளர் என்பதனால் இரண்டு விமானங்களால் மட்டும் இவ்வாறானதொரு பாரிய சேதத்தினை ஏற்படுத்தமுடியாதெனவும் வேறு ஏதாவது திட்டமிடப்பட்ட வெடிப்புச் சம்பவமும் அதனோடு தொடர்பு பட்டிருக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அமெரிக்காதான் இதனை நடத்தியதாக அவர் கருத்தெதனையும் குறிப்பிடவில்லை.ஐ.நாவின் பொதுக் கூட்டத்திற்காக தற்போது நியூயோர்க் சென்றுள்ள அவர் ஊடகமொன்றிற்கு அளித்த நேர்காணலின் போதே இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.சர்ச்சைக்குரிய கருத்துக்கள் பல வெளியிட்டு புகழ் பெற்றுள்ள அஹமட் நிஜாட்டின் இக்கருத்தும் பரபரப்பை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

# புதிய விசா நடைமுறை விதிகளை தளர்த்தியது அவுஸ்ரேலிய அரசு

அவுஸ்ரேலிய அரசு புதிய விசா நடைமுறைகளை அறிவித்துள்ளது. அவுஸ்ரேலியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஏராளமான வெளிநாட்டு மாணவர்கள் படிக்கின்றனர்.கிட்டத்தட்ட ஒரு இலட்சம் இந்திய மாணவர்கள் அவுஸ்ரேலியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் படிக்கின்றனர்.

இதன் காரணமாக அவுஸ்ரேலியா வரும் இளைஞர்கள் கணிசமான பணத்தை கையிருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் கைச் செலவுக்காக பல்வேறு இடங்களில் வேலை செய்வதைத் தவிர்க்கும் நோக்குடன் புதிய விதிமுறை ஏற்படுத்தப்பட்டது.அவுஸ்திரேலியாவில் படிக்க வரும் மாணவர்களின் வங்கிச் சேமிப்பில் 18 இலட்ச ரூபாய் இருப்பதாக நிரூபித்தால் தான் அவரகளுக்கு விசா வழங்கப்படும் என்ற விதிமுறை உள்ளது.

ஆனால் இந்த நடைமுறையால் வசதி குறைந்த மாணவர்கள் அவுஸ்ரேலியா செல்வது தடுக்கப்பட்டு விட்டது. எனவே விசாக் கெடுபிடிகளைத் தளர்த்தும் படி பல்கலைக்கழகங்கள் அந்நாட்டு அரசைக் கேட்டுக் கொண்டன. இதையடுத்து அரசு விசா நடைமுறையில் சில மாற்றங்களைச் செய்துள்ளது.இது குறித்து நியூ சவுத் வேல்ஸ் முன்னாள் அமைச்சர் மைக்கேல் நைட் குறிப்பிடுகையில்,"அவுஸ்ரேலியாவுக்குப் படிக்க வரும் மாணவர்கள் தங்கள் படிப்பு முடிந்த பின் மேற்படிப்புக்காக கூடுதலாகத் தங்கிக் கொள்ள தற்போது வசதி செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் வங்கிக் கையிருப்பு கணிசமான அளவில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் தளர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அவுஸ்ரேலியா வரும் மாணவர்கள் படிப்பதற்காக மட்டுமே வருகிறோம். வேலை செய்வதற்கு அல்ல என்பதை நிரூபிக்க வேண்டும்" என்றார்.

# போதையில் படகை ஓட்டியவர் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலுடன் மோதினார்

(ரஷ்யா)

போதையில் மீன்பிடிப் படகு ஓட்டி வந்தவர் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் மீது மோதினார். அதிர்ஷ்டவசமாக கப்பல் தப்பியது. இதுகுறித்து ரஷ்ய அதிகாரிகள் கூறியதாவது: ரஷ்யாவின் பெட்ரோ பாவ்லாஸ்கி-கம்சட்கா கடற்பகுதியில் அணு ஆயுதம் தாங்கிய செயின்ட் ஜார்ஜ் தி விக்டர் என்ற நீர்மூழ்கிக் கப்பல் சென்று கொண்டிருந்தது. அப்போது மீன்பிடிப் படகு ஒன்று நீர்மூழ்கி கப்பல் மீது திடீரென மோதியது.

வேறு ஒரு படகு மீது மோதுவதை தவிர்க்க திடீரென திருப்பியதால் இந்த விபத்து நடந்தது. மீன்பிடிப் படகை ஓட்டி வந்தவர் போதையில் இருந்தது தெரிய வந்தது. அதிரஷ்டவசமாக நீர்மூழ்கிக் கப்பல் லேசான சேதத்துடன் தப்பியது. அதனால் கதிர்வீச்சும் ஏற்படவில்லை. இந்த விபத்தில் யாருக்கும் காயம் இல்லை. சேதம் அடைந்த நீர்மூழ்கிக் கப்பலின் வெளிப்பகுதியை பழுதுபார்க்க அனுப்பப்பட்டுள்ளது.

இந்த கப்பல் கடந்த 80ஆம் ஆண்டில் இருந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்த விபத்து கடந்த 20ஆம் திகதி நடந்தாலும் இப்போது தான் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியா, சீனா பொருளாதாரத்தில் அபார வளர்ச்சியடையும்

## அமெரிக்க நிதி அமைச்சர் தகவல்

அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியா, பிரேசில், சீனா ஆகிய நாடுகளின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும் என அமெரிக்காவின் நிதி அமைச்சர் திமோதி கெய்த்னர் தெரிவித்துள்ளார். வோஷிங்டனில் உலக பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு அமெரிக்க நிதி அமைச்சர் திமோதி கெய்த்னர் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: அடுத்த 10 ஆண்டுகளில் அதிக மக்கள் தொகை கொண்ட இந்தியா, சீனா, பிரேசில் போன்ற நாடுகள் வியத்தகு வளர்ச்சியைக் காணும் என்றார். அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கு அவை பெரிதும் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.வரும் 10 ஆண்டுகளில் அமெரிக்காவின் ஏற்றுமதியை இருமடங்காக அதிகரிக்க அதிபர் ஒபாமா நிர்வாகம் இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் திமோதி கெய்த்னர் கூறினார்.

ஐந்து ஆண்டுகளில் உலக நாடுகளின் வளர்ச்சி எந்த அளவிற்கு உள்ளதோ, அதற்கேற்ப அமெரிக்காவின் ஏற்றுமதி வளர்ச்சியும் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.அமெரிக்காவில் விவசாயம், தயாரிப்புத் துறை, உயர் தொழில் நுட்பம், சேவைத்துறை போன்ற அனைததும் நன்கு செயற்பட்டு வருகின்றன.நிதி நெருக்கடி, பொருளாதார தேக்க நிலை போன்றவற்றால் அமெரிக்காவுக்கு பாதிப்பு ஏற்பட்டாலும், அவற்றிலிருந்து எளிதாக மீள முடிந்ததற்கு அமெரிக்கா நிதி நிர்வாக முறைகள்தான் காரணம் என்று திமோதி கெய்த்னர் குறிப்பிட்டார்.

# அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா வலியுறுத்தல்

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன அமைதிப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடர வேண்டும், என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

2012ம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப் பட வேண்டும் என்ற இலக்குடன் இந்தப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.ஐரோப்பிய ஒன்றி யம், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளும் இதை வலியுறத்தியுள்ளன.

# பதிவிறக்கப் பெட்டகம்

**பா**லன் [விகடன் ஆசிரியர் பாலசுப்ரமணியன்] அவர்கள், நாய்கள் மட்டுமின்றி பறவைகள், செடிகொடிகள் எல்லாவற்றையும் நேசிப்பவர். தீவிர விவசாயி. அவர் வைத்திருந்த பண்ணையில் விதம்விதமான காய்கறிகள் பயிரிட்டார். பல பறவைகள் வளர்த்தார். 'இந்தியன்' திரைப்படத்தில் அவைகளைப் பயன்படுத்த அனுமதித்தார். [அதில் மனிஷா கொய்ராலா ஒரு பிராணிப் பிரியை] பாலன் வீட்டில் 'குண்டு' என்ற ஒரு பெரிய அல்சேஷனும், ஓரிரு பாமிரேனியன்களும் உலவின. 'குண்டு'தான் கப்டன். அது போகும் இடமெல்லாம் பாமிரேனியன்கள் கூடச் செல்லும்.

குண்டு, பொலிஸ் பயிற்சி பெற்ற ரொம்ப புத்திசாலி நாய். 'அழு' என்றால், கண்ணைத் துடைத்துக்கொண்டு அழும். 'நில்' என்றால், மறுகட்டளை வரும்வரை நிற்கும். 'படு' என்றால் படுத்துக் கொள்ளும். ஒருமுறை ஹாலில் நான், பாலன் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கே வந்தது. பாலன் அதனிடம், 'குண்டு– இப்படி குறுக்க வரக்கூடாது. போய்ட்டு பத்து நிமிஷம் கழித்து வர்ரியா?' என்றார். அப்படியே செய்தது. நான் பயத்துடன், "சார்– இந்த நாய் கதை எழுதுமா?" என்றேன்.

– சுஜாதா

**அ**சோகமித்திரன் கணையாழியில் 40 ஆண்டுகள் ஆசிரியர் பொறுப்பில் இருந்தவர். அதில்தான் 30 ஆண்டுகளுக்கு மேலாக சுஜாதா கடைசிப் பக்கங்களை எழுதினார். ஒரு வகையில் இருவரும் சகாக்கள். அப்படிப்பட்டவர் சுஜாதாவின் மரணத்திற்கு எழு[illegible]யிருக்கும் இரங்கல் கட்டுரை என்ன தெரியுமா? " சுஜாதா எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார். அப்போது என்னிடம் ஒரு கேமரா இருந்தது. அந்தக் கேமராவில் நாங்கள் ஒரு போட்டோ எடுத்துக் கொண்டோம்." ஐயா, என்னை நம்புங்கள். அவ்வளவுதான் இரங்கல் கட்டுரை. இப்படி ஒரு இரங்கல் கட்டுரை வேறு எந்த எழுத்தாளருக்காகவும், உலகில் வேறு எந்த மொழியிலும் எழுதப்பட்டிருக்காது என்று நினைக்கிறேன். இருக்கட்டும், எனக்கும் ஒரு சந்தர்ப்பம் வராமலா போகப் போகிறது? 'நான் அசோகமித்திரன் வீட்டுக்குப் போனேன். அவர் ஒரு பூனை வளர்த்தார். அது என்னைப் பார்த்து மியாவ் என்று சொன்னது. நானும் மியாவ் என்று அதனிடம் சொன்னேன்.' எழுதுகிறேனா இல்லையா என்று பாருங்கள் அசோகமித்திரன்.

– சாரு நிவேதிதா

**த**ங்கத் தட்டில் சாப்பிட்டுப் பின்னர் சாப்பிடுவதற்குப் பிச்சையேந்திச் செத்த தியாகராஜ பாகவதரின் வாழ்க்கை வரலாற்றைக் காவியச் சோகம் கொண்டதாக ஒருசாரார் நினைத்தால், இன்னொரு சாரார் பிழைக்கத் தெரியாதவன் கதை என்பார். சரி, அசோகமித்திரன் என்ன நினைக்கிறார் என்பதைத் தெளிவாய் அறிந்து கொண்டுவிட முடியாத எழுத்துப்பாணி அவருடையது.

– பிரபஞ்சன்

**ந**குலன் தமிழில் 'நவீனம்' என்பதில் முழு அர்த்தத்தையும் கொண்டுவர முயற்சித்து அதில் சாதனைகளையும் செய்தவர் என்பதை மறுக்க முடியாது. பொதுவாக அவரின் நிலை வாழ்வின மீதான விசாரணையை தத்துவத்தின் பின்னணியில் நகர்த்துவது என்று வைத்துக்கொள்ளலாம். அவர் அதைக் கைக்கொண்டதும் தன்னுடனான சக எழுத்தாளர்களின் உரையாடல்களையும் அப்படி வைத்துக்கொள்ள முயற்சித்திருக்கலாம். அது ஏதாவது பொறி சிக்குகிறதா என்று துழாவிப் பார்க்கிற வேட்டைக்காரனின் தூண்டில் கவனம்தான். அதில் பல தோல்வியாக முடிந்திருப்பதை நகுலன் பதிவு செய்யாமல் போய்விட்டதன் விளைவாக அவர் இப்போது மற்றொரு விதமாக அபாயமாக அணுகப்படுகிறார் என்றே நினைக்கிறேன்.

தன் வயதையொத்தவர்களுக்கு வருகிற வழக்கமான Senile dementia–வில் அவர் சிரமப்படுவதை நம் எழுத்தாளர்கள் ஆளுக்கொரு அர்த்தத்தில் விளக்கம் சொல்கிறார்களோ என்று தோன்றுகிறது. அந்த நினைவுப் பிசகு மூப்படைந்த மூளையின் இயல்பான களைப்பு. நகுலன் குடிப்பாரா என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை அந்தப் பழக்கம் இருந்து பல வருடங்களாகக் குடித்திருந்தால் இந்த எண்பது வயதில் அவர் மூளை மிகப் பலவீனமாக இருக்கும். இந்த நிலையில் அதன் முதல் பெரிய வீழ்ச்சி ஞாபகங்கள்தான்.

மாற்றிப் பேசுவது, புதிய சம்பந்தமில்லாத வார்த்தைகளைப் பேசுவது, அனர்த்தச் செய்கைகள் எல்லாவற்றுக்கும் மெடிகல் டெர்ம்ஸ் இருக்கிறது. இது கடைசி காலத்தின் வழக்கமான செயல்பாடு. இந்த நிலையில் சிரமப்படுகிற பெரியவர் நகுலனை ரிஷி போலவும், மாயாவிநோத சக்தி கொண்டவர் போலவும், அவர் இருமுவதற்குக் கூட இவர்கள் தத்துவத்தில் விளக்கம் தேட முற்படுவதும் சலிப்பூட்டுகிறது. அவரிடம் இருந்த ஒரே சக்தி எழுத்து சக்தி. உடல் பலமும், மூளை பலமும் சரியாக இருந்த வரை அதை அவர் திறமையாக இலக்கியத்திற்காகப் பயன்படுத்திப் பார்த்தார். சாதித்தார். தமிழின் நவீன இலக்கியத்திற்கு அவர் ஒரு கொடை.

அவரைச் சந்திக்க விரும்புபவர்கள் அவரைச் சந்திக்கலாம். அவருக்கு ஏதாவது தேவை இருக்கிறதா என்று தெரிந்து செய்துவிட்டு வரலாம். குருவாக நினைக்கிறவர்கள் கால்களில் விழுந்து வணங்கிவிட்டு வரலாம். அதை விட்டுவிட்டு இப்போது அவர் பேசுவது எல்லாம் ஏதோ இருக்கிற இந்தியத் தத்துவங்களையே உறைய வைக்கிற புதிய தத்துவம் போல பொய்யாக பிரமிப்புக்காட்டுவது அவரை அவமானப்படுத்துவது போல இருக்கிறது. நல்லவேளை இவர்களிடம் நகுலனின் குழந்தைக்கால பேச்சுக்கள் எதுவும் சிக்கவில்லை.

– பரசுராம் [நகுலன் மறைவுக்கு முன்]

‘அரசியலை ஈழத் தமிழர்கள் பொதுவாக எப்படி விளங்கி வைத்திருககின்றனர்’ என்பது இன்று முக்கியமான கேள்வி.

ஏனென்றால், அதிகமதிகம் அரசியல் குறித்துச் சிந்திப்போராகவும் அரசியல் விவாதங்களில் அதிகமாக ஈடுபடுவோராகவும் எதையும் அரசியலுக்கூடாகவே பார்ப்போராகவுமே இருக்கும் ஈழத்தமிழர்கள் ஏன் தொடரந்தும் பின்னடைவு நிலையிலேயே இருக்கின்றனர்? என்ற யதார்த்த நிலைமைக்கு - உண்மை குறித்த கேள்விக்குப் பதிலைக் காணமுற்படும்போது இந்தக் கேள்வியே எழுகின்றது.

கடந்த அறுபது ஆண்டுக்கு மேற்பட்ட அரசியற் போராட்ட வரலாற்றில் தமிழ்த் தலைமைகள் பெற்ற வெற்றிகளும் மக்கள் ஆதரவும் குறிப்பிடத்தக்கன. ஆனால், அவையெல்லாம் அரசியல் வெற்றிகளாக மாற்றப்பட்டனவா? என்பதே கேள்விக்குரியது. பின்னாட்களில் மக்கள் செய்த தியாகங்கள், போராளிகளின் வீரச்செயல்கள், ஏற்பட்ட இழப்புகள்... எல்லாவற்றுக களின் ஒற்றுமை குறித்து மீண்டும் அப்போது சிந்திக்கப்பட்டதன் விளைவாக, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. கூட்டணியையும் அது செய்த பிரகடனங்களையும் அதன் கோரிக்கைகளையும் மக்கள் ஆதரித்தனர். ஏறக்குறைய தமிழீழத்திற்கான அங்கீகாரத்தை அன்று கூட்டணி மக்களிடம் முன்வைதததது. வயோதிப நிலையிலிருந்த செல்வநாயகத்தையும் விட துடிப்பு மிக்க தலைவராக அமிர்தலிங்கம் பலருக்கும் தெரிந்தார்.

இவற்றின் விளைவாகக் கூட்டணி மிகப் பெரிய அரசியல் வெற்றியைப் பெற்றது. யாருமே எதிர்பார்த்திராத வகையில், திரு. அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.

ஆனால், அப்படியிருந்தும் தமிழ் மக்களுடைய அரசியற் பிரச்சினைக்குததீர்வு காண முடியவில்லை. பதிலாக மேலும் நெருக்கடிகளே ஏற்பட்டன. மக்களின் வாழ்க்கை சிக்கலுக்குரியதாகியது.

அதற்குப் பிறகு, இயக்கங்களின் இதற்கொரு உதாரணம்.

எனினும் எதிர்பார்த்தவாறு பின்னர் நிகழ்ச்சிகள் அமையவில்லை. தமிழர்களே இந்திய அமைதிப்படையினால் அதிக பாதிப்புகளைச் சந்தித்தனர். இலங்கை இந்திய உடன்படிக்கை கசபபானதொரு வரலாற்று நிகழ்ச்சியாகத தமிழர்களுக்கு அமைந்தது. இதன் விளைவாகப் பின்னர் ஏற்பட்ட இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலை நிகழ்ந்து, தமிழர்களின் அரசியலுக்கு இந்தியா ஒரு எதிர்ச்சக்தியாக மாறியது.

அதற்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் எழுச்சிக்காலம். புலிகளின் எழுச்சிக்குப் பின்னர் ஏற்பட்ட தமிழ்த் தேசிய அலைக்கு பல தரப்புகளில் இருந்தும் மக்கள் ஆதரவுகள் கிடைத்தன. அதாவது, 1990 க்குப் பின்னர், புலிகளைப் பலரும் ஆதரித்தனர். 2002 க்குப் பின்னர் இந்த ஆதரவு அலை மேலும் உயர்ந்தது. புலிகளைக் கடுமையான விமர்சனங்களுக்குட்படுத்தியோர் கூட தங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டு, புலிகளுக்கு, அவர்களுடைய வாய்ப்புகள் துரதிருஷ்டமாக வெற்றியடையவில்லை. மிகச் சடுதியாக மாறறமடைந்த அரசியல் நிலைவரம் தமிழ் மக்களுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது. அத்துடன், தமிழர்களின் அரசியற் போக்கையே நெருக்கடிக்குள்ளாக்கியது. குறிப்பாக அரசியல் ரீதியாகவும வாழ்வியல் ரீதியாகவும் தமிழர்கள் மிகப் பலவீனமான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இப்போது தமிழர்கள் அனைத்து வகையான போராட்டங்களையும் நடத்தித் தோல்வியடைந்த நிலையிலேயே இருக்கின்றனர். உண்ணாவிரதம், ஊர்வலம், ஹர்த்தால், கடையடைப்பு, சத்தியாக்கிரகம் என்றமைந்த சாத்வீகப் போராட்டத்திலிருந்து, ஆயுதப்போராடடத்தின் அத்தனை சாத்தியங்களையும் பயன்படுத்தி, கரும்புலித் தாக்குதல் வரை சென்றும் எதனையும் சாதிக்க முடியாத நிலையிலேயே தமிழர்களின போராட்டமும் அரசியலும் இன்றுள்ளன.

இது மறுக்க முடியாத உண்மை.

இது ஏன் நிகழ்ந்தது?

1990 வரையில் விடுதலைப் புலிகள்

# ஈழத்தமிழர்களின் அரசியல் ஏன் தொடர்ந்தும் பின்னடைவு நிலையிலேயே இருக்கிறது?

குப் பின்பும் தமிழ் மக்களின் அரசியல நிலைவரம் என்பது மிகமிகப் பலவீனமானதாகவே உள்ளது.

அரசியல் வெற்றியாக - மக்களுக்குரிய வெற்றியாக, பிரச்சினைகளுக்கான தீர்வாக, தாம் பெற்றுக் கொண்ட வெற்றிகளை மாற்றக் கூடிய வலலமை ஏன் தமிழ்த் தலைமைகளிடமும் தமிழர்களிடத்திலும் இல்லாமற் போகிறது?

இதுவே நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய கேள்வியாகும். இந்தக் கேளவியை மையப்படுத்தியே இந்தப் பத்தி எழுதப்படுகிறது.

ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியும் அதனுடைய தலைவர்களும் மகத்தான வெற்றிகளைப் பெற்றனர். மக்களிடத்திலும் அந்தக் கட்சிக்கும் அன்றைய தலைவர்களுக்கும் பெரும் வரவேற்பும் மதிப்பும் இருந்தன.

மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக (சாதி ஒழிப்புப் போராட்டங்கள் உட்பட) முக்கிய






மான அரசியற் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்த அன்றைய இடதுசாரிக் கட்சிகளையும் விட தமிழரசுக் கட்சியே அதிக செல்வாக்கைக் கொணடிருந்தது. அப்போது நிலவிய இருதுருவ அரசியல் அரங்கில் இடதுசாரிச் சிந்தனைக்குப் பெருமதிப்பிருந்தபோதும் தமிழரசுக்கட்சியே தமிழர்களிடத்தில் செல்வாக்கைச் செலுத்தியது.

ஆனால், தமிழரசுக் கட்சியினால், ஒரு அரசியற் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரு கட்டத்தில் திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ‘தமிழர்களை இனிக் கடவுள்தான் காபபாற்ற வேண்டும்‘ என ஒரு ஆன்மீகத் தலைவர் சொல்லக் கூடிய வார்த்தையுடன் தன்னுடைய நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் நிலையே கிட்டியது.

அதனுடன் தமிழரசுக் கட்சியின் யுகம முடிவுக்கு வந்தது.

பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி அரங்கிற்கு வந்தது. தமிழ்க் கட்சி

காலம். அதாவது, ஆயுத அரசியற் போராட்டக்காலம்.

தொடக்கத்தில் மூத்த தலைமுறையினரிடத்தில் ஆயுதப் போராட்டம் ஒரு நம்பிக்கையீனத்தையும் எதிர்ப்பு மனநிலையையும் ஏற்படுத்தியிருந்தாலும் பின்னர், பெரும்பாலானோரின் ஆதரவை அது பெற்றுக் கொண்டது. இடதுசாரிகளில் ஒரு சாரார் கூட ஆயுதப் போராட்டத்தை அங்கீகரித்தனர். ஒவ்வொருவரும் தமக்குத் திருப்தியளிக்கக்கூடிய போராட்ட அமைப்புடன் இணைந்து செயற்பட்டனர். அல்லது அந்த அமைப்புகளுக்கு ஆதரவளித்தனர்.

இதன் விளைவாக 1980 களின் நடுப்பகுதியில் இலங்கை அரசாங்கம் போராட்ட அமைப்புகளுடன் பேசவேணடிய ஒரு நிலை ஏற்பட்டது. இதுவும் ஒரு வெற்றியாகவே அப்பொழுது தமிழ் மக்களால் கருதப்பட்டது. இலங்கை அரசு இறங்கி வந்துள்ளதாகவும் இனிமேல் தமிழர்களை அது ஏமாற்ற முடியாது என்றும் அப்போது பேசப்பட்டது. ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கான அங்கீகாரமாக, அந்த அமைப்புகள் தமிழ் மக்களுக்கான அரசியற் சக்திகளாக மாறியுள்ளன என்று நோக்கப்பட்டது.

பின்னர், இலங்கை இந்திய உடன்படிக்கைக் காலத்திலும் ஏறக்குறைய இலங்கை அரசாங்கம் தோற்று விட்டதாகவும் நெருக்கடியில் சிக்கியுள்ளதாகவும் கருப்பட்டது. இதேவேளை தமிழர்களுக்குச் சாதகமான ஒரு நிலையே இருப்பதாகவும் உணரப்பட்டது.

இந்திய இலங்கை உடன்படிக்கையானது பெரும்பாலும் சிங்களத்தரப்பின் அதிகார வரம்பைக் கட்டுப்படுத்தி, தமிழர்களுக்கான அரசியல் உத்தரவாதங்களை அதிகபட்சமாக வழங்குவதாகவே சிங்களமக்களால் கருதப்பட்டது. வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் குடியேறிய சிங்களவர்கள் அச்சத்தோடு அங்கிருந்து விலகிச் சென்றது

போராட்டத்துக்கு ஆதரவை நல்கினர்.

2000 ஆம் ஆண்டு ஆனையிறவு வெற்றியைப் புலிகள் பெற்ற பின்னர் ஒரு கட்டத்திலும் 2002 சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட சமயத்திலுமாக இரண்டு கட்டங்களில் புலிகளின் மீதான அபிமானம் பெரு மளவிற்கு பெருகியது. ஏறக்குறைய பலருக்கும் நம்பிக்கையளிக்கக் கூடிய ஒரு சக்தியாக அப்போது பலரும் புலிகளைக் கருதினர். சிலர் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

ஏறக்குறைய 2002 தொடக்கம் 2006 நடுப்பகுதிவரையில் புலிகள் அரசியல் அரங்கிலும் ஆயுதப் போராட்ட சக்தியாகவும் மிக முக்கியமான தரப்பாகக் கருதப்பட்டனர்.

இந்தக் காலப்பகுதியில் இலங்கைப பாராளுமன்றத்திலும் புலிகளின் கை பலமான வகையிலேயே இருந்தது. அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவர்கள் பாராளுமன்ற அரசியலுக்கான கருவியாகப் பயன்படுத்தினர்.

ஆகவே, தமிழர்கள் ஆயுதப்போராட்ட சக்தியாகவும், பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திலும் செல்வாக்குடையோராக இக்காலப்பகுதியில் இருந்தனர். அத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததன் காரணத்தினால், சர்வதேச அரங்கிலும் தமிழர்கள் மீதான கரிசனைகள் வலுவானதாக இருந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழகத்திலும் புலிகளுக்குச் சாதகமான, ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான ஒரு நிலையே காணப்பட்டது. குறிப்பாக, 1990 இல் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகு, வெளிப்படையான ஆதரவைத் தமிழகம் அப்போதே வழங்கியது.

இந்தக் காலகட்டம் என்பது, ஈழத் தமிழர்களின் அரசியற் பாதையில் மிக முக்கியமான ஒரு காலகட்டமாகும். அத்துடன் அதிக வாய்ப்புகளையும் பலமான நிலையையும் உடைய ஒரு காலகட்டமுமாக இது இருந்தது.

ஆனால், இந்தக் காலகட்டத்தின்

அமைப்பைத் தடைசெய்திருக்காத பல நாடுகள் 90க்குப் பின்னர் அடுத்தடுத்துத் தடைசெய்யும் சட்டங்களைக் கொண்டு வந்தன.

இன்னும் எந்தவொரு நாடும் ஈழத் தமிழரின் அரசியற் பிரதிநிதிகளை முழுதாகவும் வெளிப்படையாகவும் அங்கீகரித்ததாக இல்லை. இந்தியாவின் அழைப்புகளும் அனுசரிப்புகளும் திருப்தியளிக்கக்கூடியதாகவோ நம்பிக்கையளிக்கக் கூடியதாகவோ இருப்பதில்லை என்பதால், அதைக் குறித்து நாம் அதிக கரிசனை கொள்ளத் தேவையில்லை.

மற்றும்படி கௌரவமான நிலையில், இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக எந்த ஒரு நாடும் தமிழ்ப் பிரதிநிதிகளை அழைத்து, பேசுவதற்கோ அபிப்பிராயம் கேட்பதற்கோ இன்னும் தயாராகவில்லை.

இதுதான் நாம் கவனிக்க வேண்டிய விசயமாக இன்றிருக்கிறது.

சிங்கள அதிகாரத் தரப்பைத் தோற்கடிக்க வேண்டுமாயின், அவர்களுடைய ராசதந்திரத்தை மேவக் கூடியவாறு தமிழர்களின் அரசியல் அணுகுமுறைகளும் இராசதந்திர நடவடிக்கைகளும் அமையவேண்டும்.

சிங்களத்தரப்பினர், 1980களில் இருந்த நிலைமையை விடவும் இன்று மிகப் பலமான நிலையிலேயே இருககின்றனர். ஒன்று சிங்களத் தேசிய வாதம் இன்று மிகக் கட்டிறுக்கமாகியுள்ளது. அடுத்தது, அது இந்தியா, சீனா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவை ஏதோ ஒரு வகையில் தன்கையில் கொண்டிருக்கிறது.

இடையில் போர்க்குற்றங்கள் போன்ற சிறு நெருக்கடிகள் வந்தாலும் கடந்த காலத்தில் வந்த நெருக்கடிகளை அது சாதுரியமாகக் கடந்ததைப் போலவே இப்பொழுதும் அது தனது நெருக்கடிகளைக் கடந்து விடும என்றே தோன்றுகிறது.

**- சஞ்சீவன் ஜெயக்குமார்**

ஆகவே, இன்று தமிழர்கள் கொணடிருக்கின்ற இந்தத் தற்காலிக நம்பிக்கைகள் நிரந்தர மகிழ்ச்சிக்கும் வெற்றிக்கும் வழியேற்படுத்துமா என்றே கேட்கத் தோன்றுகிறது.

எதிர்த்தரப்பிற்கு ஏற்படுகின்ற அரசியல் நெருக்கடியை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் சாதுரியம் தமிழர்களிடத்தில் மிகமிகக் குறைவே.

இது ஒற்றை மைய அரசியற்காலமாகும். அதாவது, உலகத்தின் அரசியற போக்குகள் பெரும்பாலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# யு.ஏ.ஆர்.எஸ் செயற்கைக் கோள் பசுபிக் சமுத்திரத்தில் விழுந்தது

## நாஸா விண்வெளி மையம் அறிவிப்பு



(வொஷிங்ரன்)

அமெரிக்க செயற்கைக் கோளான UARS பசுபிக் சமுத்திரத்தில் நேற்றுக் காலை விழுந்துள்ளதாக நாசா விண்வெளி மையம் அறிவித்துள்ளது.

1991ஆம் ஆண்டு அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் ஆறு தொன் எடையுள்ள இந்த செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியிருந்தது. இச்செயற்கைக் கோள் பூமியின் வளிமண்டலம் குறித்த பல தகவல்களை அனுப்பி வந்திருந்த நிலையில், 2005 ஆம் ஆண்டு அது செயலிழந்தது.

இதன் பின்னர் பூமியை வெறுமனே சுற்றி வரும் பல செயற்கைக் கோள்களைப் போன்று இந்த செயற்கைக் கோளும் பூமியைச் சுற்றி வந்தது.

இச்செயற்கைக் கோள் எதிர்பாராவிதமாக பூமியின் ஈர்ப்பு விசையால் கவரப்பட்டு பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதை விஞ்ஞானிகள் அவதானித்தனர்.

இந்நிலையில், இந்த செயற்கைக் கோள் கனடாவில் வந்து விழுந்துள்ளதாக நாசா விண்வெளி மையத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த செயற்கைக் கோள் பல துண்டுகளாக உடைந்து பெரும் குப்பை போல கனடாவில் விழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக டுவீட்டர் மூலம் தகவல்கள் வந்து கொண்டிருப்பதாகவும், கனடாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கல்காரியின் தெற்கில் உள்ள ஒகோடோக்ஸ் என்ற பகுதியில் இந்த செயற்கைக் கோள் விழுந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2001ஆம் ஆண்டு ரஷ்யாவின் 135 தொன் எடையுள்ள மிர் விண்கலம், பசிபிக் பெருங் கடலில் விழுந்தது. இதை ரஷ்ய விஞ்ஞானிகள் தரைக் கட்டுப்பாட்டின் மூலம் இயக்கி கடலில் கொண்டு போய் விழ வைத்தனர்.

ஆனால், தற்போது விழுந்துள்ள அமெரிக்க செயற்கைக் கோள் எரிபொருள் முடிந்துவிட்ட காரணத்தால் கட்டுப்பாட்டை இழந்து அதுவாகவே விழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக் கோள் 35 அடி நீளமானதாகும். இச்செய்மதியின் தலா 500 கிலோகிராம் எடையுள்ள சுமார் 26 பாகங்கள் பூமியில் விழும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் நாசா விண்வெளி மையம் முன்னர் தெரிவித்திருந்தது.

1979 ஆம் ஆண்டில் 75 தொன் எடையுள்ள ஸ்கைலாப் விண்வெளி நிலையமும், பேகஸஸ் - 2 எனும் செயற்கைக் கோளும் பூமியில் விழுந்தபின், விண்வெளியிலிருந்து கட்டுப்பாடின்றி பூமியில் விழும் மிகப் பெரிய செயற்கைக் கோள் இதுவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை

புதிதாக நியமனம் பெற்ற 4 ஆயிரத்து 191 உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கு பயிற்சிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி சபை நடவடிக்கைகளை திறன்படுத்தும் வகையிலேயே இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

குறித்த நடவடிக்கைகள் இந்தியாவில் கடைபிடிக்கப்பட்டு வரும் கிராமிய அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது இந்தியாவில் அமுலில் உள்ள பஞ்சாயத்து முறை அல்லது இலங்கை நடைமுறையான ஜன சபா முறைமைக்கு அமைவாக இருக்கும் என செயலாளர் குறிப்பிட்டார்.

25 மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் குறித்த பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வழங்க முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இரவு வேளை விழித்திருக்கும் கொக்குவில் பகுதி மக்கள்

(கொக்குவில்)

கொக்குவில் பகுதியில் வசிக்கும் மக்கள் இரவானதும் திருடர் நடமாட்டத்தினால் விழித்திருப்பதாக அறிய முடிகிறது.

குறிப்பாக இரவு 10.00 மணி முதல் அதிகாலை வேளை வரை ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஆண்கள் காவல் கடமையில் ஈடுபடுகின்றனர்.

அண்மையில் கூட இப்பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. ஆனால் இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடுகள் தெரிவித்தும் எதுவித பலனும் இல்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இப்பிரதேசத்தில் இராணுவம் இனந்தெரியாத நபர்கள் குழுக்களாக நடமாடுவதாகவும், இவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்.

(எப்.எஸ்)

# தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறி பேருந்தில் பயணம் செய்த 19 ஜோடிகள்

(கொழும்பு)

பொதுமக்கள் பிரயாணிக்கும் பஸ் வண்டிகளுள் தவறான விதத்தில் நடந்து கொண்டதாக 19 இளம் காதல் ஜோடிகள் மாத்தளை வலய குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஸ்ஸில் பயணிப்பவர்கள் போல் போலி வேஷம் தரித்த பொலிஸார்களினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தனியார் வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறி, இக்காதல் ஜோடியினர் அவ்வகுப்புக்களுக்குச் செல்லாது மாத்தளையிலிருந்து கண்டிக்கும், கண்டியிலிருந்து மாத்தளைக்கும் வருவதும் போவதுமாக பஸ்சில் இவ்வாறு தவறான விதத்தில் செயற்பட்டவேளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நாவலை, பண்டாரவளை மற்றும் கலேவல பகுதிகளில் வசிப்பவர்களாகும் என்பது தெரியவந்துள்ளது.

மாத்தளை வலயத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் திலக் அபே சிறிவர்தன அவரின் அறிவுறுத்தலுக்கிணங்க இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

## இலங்கை ...

எதிராக ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையம் எழுப்பிய குற்றச்சாட்டுகள் பற்றி ஐ.நா. சபையின் பொதுக்குழுவில் விவாதிக்க சாத்தியக்கூறு இல்லை. ஐ.நா.சபையின் பொதுக்குழு என்பது வேறு, ஜெனீவாவில் இருக்கும் ஐ.நா.சபையின் மனித உரிமை ஆணையத்தின் செயல்பாடு வேறு. ஐ.நா.சபையின் அங்கமாக மனித உரிமை ஆணையம் இருந்தாலும் அந்த ஆணையத்தின் அறிக்கைகளும் முடிவுகளும் ஐ.நா.வின் பொதுக்குழுவில் விவாதிக்கப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

பெருவாரியான உறுப்புரிமை நாடுகள் மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை பற்றி விவாதிக்க வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே பொதுக் குழுவில் அந்த விவகாரம் பற்றிய விவாதம் எடுத்துக் கொள்ளப்படும். அதற்கும்கூட முன்னதாகவே அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

மேலும், வேறு எந்த நாடும் இந்தப் பிரச்சினையில் நேரடியாக அக்கறை காட்டாத நிலையில் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட மனித உரிமை மீறல் பற்றியோ அவர்களது மறுவாழ்வு பற்றியோ பிரச்சினை எதுவும் எழுப்பப்படும் சாத்தியமே கிடையாது என்று ஹர்தீப் சிங் பூரி திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

## மனித உரிமை...

கடந்த 12 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், கூட்டத் தொடரில் பங்கெடுத்த இலங்கை தூதுக் குழுவினர் கடந்த 16 ஆம் திகதி நாடு திரும்பியிருந்தனர். எனினும் மீண்டும் கடந்த 21ஆம் திகதி அமைச்சர் மகிந்த சமரசிங்க ஜெனிவா பயணமானார்.

இந்நிலையில், ஜெனிவாவில் இருந்தவாறு கருத்து வெளியிட்ட அமைச்சர் சமரசிங்க, எதிர்வரும் 30 ஆம் திகதிவரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. அதுவரை நான் ஜெனிவாவில் தங்கியிருந்து பல முக்கியஸ்தர்களுடன் சந்திப்புக்களை நடத்தவுள்ளேன்.

மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் தூதுவர்களையும் நிரந்தர பிரதி நிதிகளையும் அடிக்கடி சந்தித்து இலங்கையின் முன்னேற்ற நிலைமை தொடர்பில் தெளிவாக விளக்கி வருவதுடன் இலங்கை தொடர்பான போலிக் குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளித்துவருகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

## சவீந்திர சில்வாவிடம்...

தாக்குதலில் காயமடைந்து மரணமான ஒருவரின் மகன் சீதாராம் சிவம் ஆகியோரே சவீந்திர சில்வாவுக்கு எதிரான வழக்கில் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இது ஒரு குற்றவியல் வழக்கு அல்ல என்றும் சவீந்திர சில்வாவினால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் மற்றும் கொடுஞ் செயல்களுக்காக அவரிடம் இருந்து நட்டஈடு கோரும் வழக்கு என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ள நீதிமன்றம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

## கோடரி...

ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இதில் ராஜாராம் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் திருமணம் முடித்து ஒரு மாதங்களே கடந்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

## டிசம்பருக்கு...

கூட்டமைப்பும் பரிசீலித்து புதிய ஒரு திட்டத்தை தயாரிக்கவுள்ளது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டத்தை நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் சமர்ப்பித்து அங்கீகரிப்பது என ஆலோசிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஜக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் அங்கம் வகிக்கவுள்ளதால் அவர்கள் அந்தத் திட்டத்தை எற்றுக்கொள்ளும் நிலை ஏற்படலாம்.

அல்லது நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அந்தத் திட்டம் நிராகரிக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. எவ்வாறாயினும் அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசுவதன் மூலமே சில விடயங்களை சர்வதேச நாடுகளுக்கு தெளிவுபடுத்த முடியும்.


அதற்காகவே அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று பேச்சுக்கு சென்றதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

## போருக்குப்...

தீர்வு காண்பதற்காக இலங்கை அரசாங்கம் மேற் கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுக்கள் தொடர்பாகவும் அவர், இந்தியப் பிரதமரிடம் விபரித்துக் கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செய்திப்பாணம்

**நூருகின்ற விளக்கு நொடியொன்று பிரகாசிக்கும் பாருலகில் அடாவடிகள் பிரகாசிக்கா - நேருகின்ற லிபியாவின் அழிவோவு லகிலாகும் சூழ்ச்சிமுறை அபிப்பிராயம் சொல்லவிது ஆகா!**



# தேசிய பாடசாலைகளில் மாணவர் அனுமதி இலஞ்சம் பெற்ற 5 அதிபர்கள் பதவிநீக்கம்



(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்கும் விடயத்தில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இவ்வாண்டு ஐந்து அதிபர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பாக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிக்கும் போது எந்த வித கட்டணங்களும் பெறப்படக் கூடாது (பாடசாலை அபிவிருத்திச்சபை மற்றும் வசதிகள் சேவைக் கட்டணம் தவிர்ந்து) என்று சுற்று நிருபங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஒரு சில அதிபர்கள் இலஞ்சம் பெறும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர். அதிபர்களின் இத்தகைய நடவடிக்கைகள் கல்வியின் தரத்தை பாதிப்பதோடு நிர்வாகச் சீர்கேட்டையும் ஏற்படுத்தும்.

பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்கும் விடயத்தில் இலஞ்சம் கோரும் அதிபர்கள் தொடர்பாக பெற்றோர்கள் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம் ஆயிரம் இடைநிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் கல்வி அமைச்சின் செயற்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் 400 பாடசாலைகளை தரமுயர்த்துவதில் சிக்கல் தோன்றியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

400 பாடசாலைகளில் உள்ள ஆரம்பப் பிரிவுகளை அப்பாடசாலைகளிலிருந்து நீக்கிகொள்வதற்கு பெற்றோர்களும் பழைய மாணவர் சங்கங்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமையே இதற்கான காரணம் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

ஏனைய 600 பாடசாலைகளில் இச்சிக்கல் ஏற்படவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளன. இப்பாடசாலைகளுக்கான ஆசிரியர்களை ஜனவரி மாதத்திற்கு முன்னதாகவே நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது சிக்கல் ஏற்பட்டுள்ள பாடசாலைகளின் சிக்கலை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# திருமலை வர்த்தக கண்காட்சியில் போர்த்தளபாடங்களும் காட்சிக்கு



(கொழும்பு)

திருகோணமலையில் நடைபெற்று வரும் ஈஸ்ட் எக்ஸ்போ - 2011 வர்த்தகக் கண்காட்சியில் படையினரின் போர்த்தளபாடங்களே பெருமளவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, கிராமிய உற்பத்தி, கடற்றொழில் அமைச்சின் ஏற்பாட்டில் திருகோணமலையில் பிரமாண்டமான வர்த்தகக் கண்காட்சி நேற்று முன்தினம் தொடக்கம் நடைபெற்று வருகிறது.

சுமார் 500 வரையான அரங்குகள் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

வர்த்தகக் கண்காட்சி என்று கூறப்பட்டுள்ள போதும் இலங்கைப் படையினர் அரங்குகளை அமைத்து தமது போர்த்தளபாடங்களை இங்கு காட்சிப்படுத்தியுள்ளனர்.

# கரவெட்டி வர்த்தக நிலையத்தில் இரண்டு இலட்சம் பணம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரிக்கு எதிர்ப்புறமாக அமைந்துள்ள பலசரக்கு கடை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு இரண்டு இலட்சம் ரூபா களவாடப்பட்டமை தொடர்பாக, நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு எதிர்ப்புறமாக அமைந்த பிரேம் என்பவருக்கு சொந்தமான பலசரக்கு கடையின் சீற்றைக் கழட்டி உட்புகுந்த திருடர்கள் 2 இலட்சம் ரூபா பணத்தினை களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி நெல்லியடி பொலிஸார் நேரடியாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இக்கடையின் அருகில் உள்ள அரைக்கும் ஆலையில் இரண்டு நாட்களுக்கு முன்னர் கடையை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கு பணம் எவையும் இல்லாமையால் ஏமாற்றத்துடன் திரும்பியதாகவும் அப்பகுதி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அனுமதிப் பத்திரமின்றி வேலைசெய்த மூன்று இலங்கையர் பிரிட்டனில் கைது



(கொழும்பு)

பிரித்தானியாவில் விசா அனுமதிப் பத்திரமின்றி வேலை செய்த இலங்கையைச் சேர்ந்த மூவர் அந்நாட்டு எல்லைக்கட்டுப்பாட்டு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்மூவரும் பிரித்தானியாவிலிருந்து நாடு கடத்தப்படுவதற்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சட்டபூர்வமற்ற வேலையாட்களை இனங்காண்பதற்காக பிரித்தானியாவின் செல்ஷயரில் வேலைசெய்பவர்களின் அனுமதிப்பத்திரங்களைத் தேடும் நடவடிக்கை ஒரு வாரமாக இடம்பெற்று வருகின்றது.

இந்தச் சட்ட அமுலாக்கல் நடவடிக்கையானது சட்டபூர்வமற்று வேலைசெய்தல், போலித் திருமணங்கள், போலிக் கல்லூரிகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட குடியேற்றக் குற்றங்கள் போன்றவற்றைப் பிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இலங்கையைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் ஒருவர் அனுமதியற்றும் விசா முடிந்துவிட்ட நிலையிலும் சட்டபூர்வமற்று வேலைசெய்து கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் விட்னஸ் பகுதியிலுள்ள லிவர்பூல் வீதியில் உள்ள உணவு விடுதியில் பணியாற்றுபவர் என கூறப்பட்டுள்ளது. இதுபோலவே இங்குள்ள மேலும் இரு கடைகளில் வேலை செய்யும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 37, 23 வயதை உடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விருவருமே விஸா முடிந்தபின்னும் அங்கு தங்கியிருந்ததாகவும் கடைகளில் சட்டபூர்வமற்று வேலை செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தமது குடிவரவுச் சட்டங்களை அலட்சியப்படுத்தும் எந்தவொரு நபரையும் தாங்கள் அந்நாட்டிலிருந்து வெளியேற்றுவோம் என பிரித்தானியாவின் எல்லைக் கட்டுப்பாட்டின் நடவடிக்கை நிர்வாகி கூறியுள்ளார்.

# பெரும்போக நெற்செய்கைக்கு விதை நெல் விநியோகம்

WFP United Nations World Food Programme

(கொழும்பு)

பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிக்கவுள்ள விவசாயிகளுக்கு இரண்டு இலட்சத்து 58 ஆயிரம் புசல் விதை நெல்லை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்த விதை நெல்லை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கையின் உதவி வதிவிட பிரதிநிதி கலாநிதி பிறேம்லால் குறுப்பு ஆரச்சி தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவ்சாயிகளும், புதிதாக விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ள விவசாயிகளுக்கும் இதன் மூலம் நன்மை அடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாத ஆரம்பம் முதல் விதை நெல் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பமாகும் என அவர் தெரிவித்தார்.

# போதைக்கு முற்றுப்புள்ளி என்ற கோட்பாட்டை மீறுகிறது அரசு

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.



(கொழும்பு)

போதைக்கு முற்றுப்புள்ளி என்னும் அரசாங்கத்தின் பிரதான கோட்பாட்டுக்கு மாறான வகையில் நாட்டின் மதுபானசாலைகளின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்வதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

2009 ஆம் ஆண்டில் 36 மதுபானசாலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டதாகவும், 2010 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 51 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்கவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சுற்றுலா சபைக்கு சொந்தமான ஹோட்டல்களுக்கு மட்டுமே மதுபானசாலை அனுமதிகள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் ஆறு மதுபான சாலைகளுக்கும், கிளிநொச்சி மற்றும் திருகோணமலையில் தலா ஒரு மதுபானசாலைக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் 4.2 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேச தலையீட்டை தவிர்க்க ஆலோசனை கூறும் ஐ.தே.க.

(கொழும்பு)

நாட்டின் அரசியல் சாசனத்திற்கு அமைவாக அரசாங்கம் செயற்பட்டால் சர்வதேச சமூகத்தின் தலையீடுகளை தடுக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் குறுகிய நோக்கத்திலான கொள்கைகளே சர்வதேச விசாரணை தொடர்பான பிரச்சாரங்களுக்கு வழிகோலியது என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளின் அடிப்படையில் அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே அரசியல் சாசனத்திற்கு அமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமேயானால் சர்வதேச சமூகத்தின் தலையீடுகளை தடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். குற்றச் செயல்களில் ஈடுபடாவிட்டால் எதனையும் மறைக்க வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# முன்னேற்றகரமாக அமைந்துள்ள ஆணைக்குழுவின் நடவடிக்கை

## அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(வொஷிங்டன்)

ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு வின் நடவடிக்கைகள் முன்னேற் றகரமாக அமைந்துள்ளதென சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சி.யில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டு வருகிறது. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நிலையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கை மையப்படுத்தி அரசாங்கம் பாரியளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.